


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

# மனுக்கள் குழு

(1997-98)

(பதினோராவது பேரவை)

ஒன்பதாவது அறிக்கை

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(பேரவைக்கு அளிக்கப்பெற்ற நாள் : 18 MAY 1998 )

சட்டமன்றப் பேரவைச் செயலகம்.
சென்னை-600 009.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| குழு உறுப்பினர்கள் (பதினோராவது பேரவை) | .. iii |
| அறிக்கை | .. v–x |
| இணைப்பு I | .. 1–9 |
| இணைப்பு II | .. 10–14 |


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## (பதினோராவது பேரவை)

## மலைக்கள் குழு

## (1997-98)

(1997 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முப்பதாம் நாள் நியமனம் செய்யப் பெற்றது)

### தலைவர்

1. திரு. பா. மு. முபாரக்

### உறுப்பினர்கள்

2 திரு. பி. இரா. இராமச்சந்திரன்

3 திரு. சொ. கருப்பசாமி

4 திரு. இ. ஏ. பி. சிவாஜி

5 திரு. ஏ. ஆர். ஆர். சீனிவாசன்

6 திரு. இ. ஜி. சுகவனம்

7 திரு. டி. சுதர்சனம்

8 திரு. பி. ஞானசேகரன்

9 திரு. ஆர். தமிழ்ச்செல்வன்

10 திரு. வி. தமிழ்மணி

11 திரு. எஸ். கே. வெங்கடேசன்

### செயலகம்

| | | |
|---|---|---|
| திரு. டி. சாலமன் ஜெயபால் | .. | செயலாளர் |
| திருமதி பாலுமதி ஆனந்தராஜன் | .. | இணைச் செயலாளர் |
| திரு. சா. கணேசன் | .. | துணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம் | .. | சார்புச் செயலாளர் |

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## மனுக்கள் குழு (1997-98)

## (பதினோராவது பேரவை)

## ஒப்பகாவது அறிக்கை

**பெறுநர்**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, சென்னை-600 009.

முன்னுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களால் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாளன்று அமைக்கப்பட்ட மனுக்கள் குழு, தனது ஒப்பதாவது அறிக்கையினைப் பேரவைக்கு அளிக்கிறது.

குழுவின் கூட்டங்கள்

20—05—1997 ஆம் நாளன்று சட்டமன்ற உறுப்பினர் விடுதி, குழுக்கள் கூடும் அறையில் மனுக்கள் குழு கூடியது. அக்கூட்டத்தில் சேலம், நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த பொது மக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என குழு முடிவு செய்தது. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக 3—6—1997, 4—6—1997, 5—6—1997 ஆகிய நாட்களில் நாளேடுகளில் செய்தி அறிவிப்பாக வெளியிடப்பட்டு, மனுக்கள் பெறுவதற்கு கடைசி நாள் 20—6—1997 எனவும் நிர்ணயிக்கப்பட்டது. பெறப்பட்ட அனைத்து மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு, தமிழ்நாடு சட்டப் பேரவை விதிகளுக்குட்பட்டிருந்த மனுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுத்துறை அலுவலர்களுக்கும் நடவடிக்கைக்கென அனுப்பி வைக்கப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டன.

14—10—1997 ஆம் நாளன்று நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில், மனுக்கள் குழு வட மாநில ஆய்வுப் பயணம் மேற்கொண்டு, அந்தந்த மாநிலங்களில் மனுக்கள் குழு செயல்படும் விதம் குறித்து அறிந்து கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது. மேலும் சேலம், நாமக்கல், தருமபுரி ஆகிய மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டுள்ள மனுக்களையும், அறிக்கைகளையும் 1998, ஜனவரி திங்கள் 6, 7, 8 நாட்களில், அந்தந்த மாவட்டங்களில் கூடி ஆய்வு செய்யலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

மனுக்கள் குழு எடுத்த முடிவின்படி, 9—12—1997 ஆம் நாளன்று சென்னையிலிருந்து புறப்பட்ட குழு கோவா, மும்பை, புதுடில்லி, சிம்லா, கல்சத்தா அந்தமான் ஆகிய இடங்களுக்குச் சென்று, அங்குள்ள மனுக்கள் குழுவோடு கலந்துரையாடி 19—12—1997 ஆம் நாளன்று சென்னை திரும்பியது.

மனுக்கள் குழு, 6—1—1998-ல் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் கூடி சேலம் மாவட்டத்தில் இருந்து பெறப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அரசுத்துறை அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டிருந்த 188 மனுக்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 45 மனுக்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. அக்கூட்டத்தில் மனுக்கள் குழுவின் உறுப்பினர்களைத் தவிர, ஓமலூர் சட்டமன்றப் பேரவைத் தொகுதி உறுப்பினர் திரு. ஆர். ஆர். சேகரனும், பார்வையாளராகக் கலந்து கொண்டார். சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜீ. முத்துசாமி, இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையில் சம்பந்தப்பட்ட மனுதாரர்களும், அம்மாவட்டத்தைச் சார்ந்த அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

குழுவின் ஆய்வுக்கென தெரிவு செய்யப்பட்ட 45 மனுக்களில் 11 மனுக்கள் மீது குழு தனது பரிந்துரைகளை அளித்தது. ஏனைய 34 மனுக்களுக்கென அளிக்கப்பட்ட அரசுத்துறையினரின் பதிலுரை குழுவால் ஏற்றுக் கொள்ளப்பட்டதால், அவை பரிந்துரைப் பதிவு செய்யப்பட்டதாகக் கருதலாம் எனக் குழு முடிவு செய்தது.

குழுவின் பரிந்துரைகள் பற்றிய மனுக்களின் விவரங்கள் இணைப்பு I-ல் அளிக்கப்பட்டுள்ளன. படித்து பதிவு செய்யப்பட்ட மனுக்கள் பற்றிய விவரங்கள் இணைப்பு II-ல் அளிக்கப்பட்டுள்ளன.

## குழுவின் பரிந்துரைகள்

குழு ஆய்வு செய்து பரிந்துரை வழங்கிய மனுக்களில், பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சில மனுக்களைப் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1. மனு எண். 6027 : தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்), பெருந்துகளை திருச்சி—கள்ளக்குறிச்சி (வழி) பெரம்பலூர், வீரகனூர், வெள்ளையூர், புளியங்குறிச்சி, சித்தேரி, ஆறகளூர், பெரியேரி, வி. கூட்டுரோடு, சின்ன சேலம் வழித்தடத்தில் இயக்குதல் குறித்து.

திருச்சியிலிருந்து—கள்ளக்குறிச்சி செல்லும் பேருந்துகள் வெறு ஊர்கள் வழியாகச் செல்வதால், புளியங்குறிச்சியில் இருந்து நகரப் பேருந்தில் பயணம் செய்த பின்னர் திருச்சி பேருந்தைப் பிடிக்கச் செல்ல இயலும் என்றும், எனவே நீண்டதூரப் பேருந்துகள் மேற்கூறப்பட்ட வழித்தடங்கள் வழியாக இயக்க வேண்டும் என மனுதாரர் குழு முன் தெரிவித்தார். மனுதாரரின் கோரிக்கையில் உள்ள வழித்தடப் பகுதி அலைத்தும் பகுதி பகுதியாக பேருந்து வசதிகள் பெற்றுள்ளது என்பதாலும், கோரியுள்ள வழித்தடத்தில் நேரடி பயணிகள் அடர்வு குறைவாக இருக்கும் என்பதாலும், புதிதாக இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க அவசியம் இருக்காது என்று மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கும்பகோணம் கோட்டம்-2, தமது அறிக்கையில் தெரிவித்திருந்தார். இம்மனு குறித்து குழு முன் விளக்கம் அளிக்கையில் பொதுமேலாளர், அரசுப் போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம் கோட்டம்-2), நீண்டதூரப் பேருந்துகளை மேற்கூறப்பட்ட இராயங்களுக்கிடையே இயக்குவதால், நீண்டதூரப் பயணிகளின் நேரத்தைப் பாதிக்குமென்றும், புதிய பேருந்துகள் வாங்கப்படும் போது மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்க முடியும் என்றும் தெரிவித்தார். மனுதாரரின் கோரிக்கையையும், மேலாண்மை இயக்குநர் மற்றும் பொது மேலாளரின் அறிக்கையையும், விளக்கத்தையும் ஆய்வு செய்த குழு போக்குவரத்துக் கழகத்தில் புதிய பேருந்துகளை வாங்கும்போது, மனுதாரர் குறிப்பிட்ட சில ஊர்கள் வழியாகநீண்டதூரப் பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என குழு பரிந்துரை செய்கிறது.

2. மனு எண். 5341 :பழங்குடியினத்தவருக்கான சாதிச் சான்றிதழ் அளிப்பதில் அரசு நிர்ணயித்த நெறிமுறைகளைப் பின்பற்றுதல் குறித்து.

பழங்குடியினத்தவருக்கான சாதிச் சான்றிதழ் அளிக்கும் போது, கல்விக்கு என்றும் பதவி உயர்வுக்கு என்றும், வங்கிக் கடனுக்கு என்றும் தனித்தனியாக சாதிச் சான்றிதழ் வழங்குவதில் பல தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றும், இது குறித்து அரசு நிர்ணயித்த நெறிமுறைகளின்படி ஒரே சாதிச் சான்றிதழ் வழங்கவேண்டுமென்றும் மனுதாரர் குழு முன் தெரிவித்தார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயலாளர், தமது அறிக்கையில் பழங்குடியினருக்கான சாதிச் சான்றிதழ் வழங்குவதை சரிபார்க்க மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என 1—4—1997ல் அரசு ஆணை வெளியிட்டது என்றும், மனுதாரர் தெரிவித்துள்ள நிலைமைகள் எதிர் காலத்தில் முற்றிலும் தவிர்க்கப்படும் வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மனுதாரரின் கோரிக்கையையும், துறையின் அறிக்கையையும் ஆய்வு செய்த குழு, மாவட்ட ஆட்சித் தலைவரும், சம்பந்தப்பட்ட அலுவலர்களும், கலந்தாலோசித்து சாதிச் சான்றிதழ் வழங்குவதில் ஏதேனும் தவறு நேர்ந்திருந்தால் அதனை உடனடியாக நீக்க வேண்டும் என்றும், அரசு நிர்ணயித்துள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி மூலச் சான்றிதழ் வழங்குவதில் தவறு ஏதும் நடக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேண்டுமென்றும் குழு பரிந்துரை செய்கிறது.

3. மனு எண். 5237 : வில்லையாபுரத்தில் பள்ளிக் கட்டிடம் கட்டவும், சத்துணவுக் கூடம் கட்டவும், கல்லாங்குத்து புறம்போக்கு நிலத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து தரக் கோருவதும் குறித்து

தனியார் ஒருவருக்கு அரசு அளித்த பட்டா நிலத்தை அவர் பள்ளிக்கு இலவசமாக வழங்கியதை அடுத்து கட்டிடம் கட்ட பிரச்சினை ஏற்பட்டது என்றும், அந்த நிலத்தை பிறர் ஆக்கிரமிப்பு செய்வதைத் தடுக்க ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பெயரில் பட்டா மாற்றம் செய்து தர வேண்டும் என்றும் குழு முன் மனுதாரர் தெரிவித்தார். மனுதாரர் கோரிக்கையையும், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் அறிக்கையையும், விளக்கத்தையும் குழு ஆய்வு செய்தது. மனுதாரர் கூறியுள்ள இடத்தைப் பிறர் ஆக்கிரமிப்பு செய்து விடுவதற்கு வாய்ப்பு இருப்பதாக மனுதாரர் பயப்படுவதில் நியாயம் உள்ளதாகக் குழு கருதுவதால், அந்த இடத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குப் பட்டா மாற்றம் செய்து தர வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் குழு வலியுறுத்துகிறது.

4. மனு எண். 5814 : தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்/சேலம் மண்டலம், தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்தை ஈரோட்டிலிருந்து சேலத்திற்கு மாற்றுவது குறித்து.

தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமானால், 130 கி.மீ. தூரம் செல்ல வேண்டுமென்றும், குடிசை மாற்று வாரியத்தில் உள்ள 3 தலைமைப் பொறியாளர்களில் ஒருவரை பொதுமக்கள் நலன் கருதி சேலத்திற்கு மாற்றலாம் என்றும் மனுதாரர் குழு முன் தெரிவித்தார். சேலம் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர், இது கொள்கை முடிவு என்றும், மின் வாரிய தலைமையகம்தான் இதனை முடிவு செய்ய வேண்டுமென்றும் தமது அறிக்கையிலும் குழு முன்னரும் விளக்கமளித்தார். மனுதாரரின் கோரிக்கையையும், மேற்பார்வைப் பொறியாளரின் விளக்கத்தையும் குழு ஆய்வு செய்தது. மனுதாரரின் கோரிக்கையில் நியாயம் இருப்பதாக குழு கருதுகிறது. எனவே, தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்/சேலம் மண்டலம் அலுவலகத்தை ஈரோட்டிலிருந்து சேலத்திற்கு மாற்ற வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

31-3-1998 ஆம் நாளன்று சென்னையில் நடைபெற்ற மனுக்கள் குழுக் கூட்டத்தில் இந்த அறிக்கைக்கு குழு தனது ஒப்புதலை அளித்தது.

சென்னை-9,
நாள் : 31—3—1998.

பா. மு. முபாரக்
தலைவர்,
மனுக்கள் குழு.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## இணைப்பு 1.

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 5263 | திரு. எஸ். கே. இராஜூ, நான்காவது வார்டு கவுன்சிலர், எருமாபாளையம் ஊராட்சி, சேலம். | எருமாபாளையம் கிராமத்தில் குருவிப்பள்ளை ஏரி அருகே சிறு பாலம் அமைக்க வேண்டுதல் தொடர்பாக. |

துறையின் பதில்.

(5)

எருமாபாளையம் சாலை கி.மீ. 0/0—1/2 வரையிலான அரசு இதர மாவட்ட சாலையின் கி.மீ. 0/2-ல் இடது பக்கத்தில் குருவிப்பள்ளை என்ற ஏரி உள்ளது. இந்த ஏரி நிரம்பி வழியும் காலங்களில் வெளியேறும் நீர் இந்த சாலையில் கி.மீ. 0/2-ன் குறுக்கே செல்கிறது. எனவே, சாலை அரிப்பு ஏற்பட்டு, தற்பொழுது மண் பகுதியாக உள்ளது. இந்த இடத்தில் மீண்டும் தார்ச்சாலை புதுப்பித்தாலும் மீண்டும் ஏரி நிரம்பி வழியும் காலங்களில் மண் அரிப்பு ஏற்படும். எனவே, இந்த இடத்தில் 40 மீட்டர் நீளத்திற்கு தரைப்பாலம் அமைக்க வேண்டியது மிகவும் அவசியம். இதற்கு சுமார் ரூ. 3.00 லட்சம் தேவைப்படும். இந்தப் பணியை பகுதி 2 திட்டம் மூலமாகவோ அல்லது ஏதாவது ஒரு திட்டத்தின் மூலமாக அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப செய்யலாம்.

குழுவின் பரிந்துரை.

(6)

இந்தக் கோரிக்கையைப் பொறுத்த வரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் இதில் சிறப்புக் கவனம் செலுத்தி, இந்தப் பணியை முடித்துத்தர வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

[கோட்டப் பொறியாளர், (நெ.கி.ப.), சேலம்-7, கடித எண். சி. எண். 7845/97/இவஅ2, நாள் 11—7—1997.]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 2 | 6027 | திரு. எஸ். பெருமாள், தலைவர், புளியங்குறிச்சி ஊராட்சி மன்றம், புளியங்குறிச்சி அஞ்சல், கெங்கவல்லி தாலுகா, சேலம் மாவட்டம். | தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம், கோட்டம்-2) லிமிடெட் பேருந்தை திருச்சி-கள்ளக்குறிச்சி (வழி), பெரம்பலூர், வீரசோழபுரம், வெள்ளையூர், புளியங்குறிச்சி, சித்தேரி, ஆறகளூர், பெரியேரி, வி.கூட்டுரோடு, சின்னசேலம் வழித்தடத்தில் இயக்க கோரல். |

(5)

கோரிக்கையில் உள்ள திருச்சி-கள்ளக்குறிச்சி (வழி), பெரம்பலூர், வீரசோழபுரம், வெள்ளையூர், புளியங்குறிச்சி, ஆறகளூர் வி.கூட்டுரோடு வழித்தடத்தின் மொத்த தூரம் 136.3 கி.மீ. இதில் திருச்சி-உடும்பியம் 86.3 கி.மீ. தூரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம் கோட்டம்-2) இயக்கப் பகுதியாகும். உடும்பியம்—வி. கூட்டுரோடு (வழி), வீரசோழபுரம், புளியங்குறிச்சி 27.0 கி.மீ.

(6)

போக்குவரத்துத் துறையினர் போதிய பேருந்துகளை வாங்கும்போது மனுதாரர் குறிப்பிட்ட சில ஊர்கள் வழியாக நீண்ட தூரப் பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

தூரம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம் கோட்டம்-1) இயக்கப் பகுதியாகும். வி. கூட்டுரோடு—கள்ளக்குறிச்சி 23.0 கி.மீ. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம், கோட்டம்-1) இயக்கப் பகுதியாகும். இவ்வழித் தடத்தில் வெள்ளையூர் - புளியங்குறிச்சி 4.0 கி.மீ. தூரம் பகுதி மட்டும் பேருந்து வசதி பெறாத பகுதியாகும். இப்பகுதியில் ஊர்கள் ஏதும் இல்லை. இப்பகுதிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்- கோட்டம்-1) தான் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்க இயலும்.

வெள்ளையூர் கிராமத்திற்கு கீழ்க்கண்டவாறு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது :—

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்து—

1. ஆத்தூர்—வெள்ளையூர் (வழி) இராமநாதபுரம் .. 6 நடைகள் (நகர்).
2. தலைவாசல்—கை.களத்தூர் (வழி) வெள்ளையூர் .. 12 நடைகள் (நகர்)
3. ஆத்தூர்—லப்பைக்குடிகாடு (வழி) வெள்ளையூர் .. 6 நடைகள் (புறநகர்)
4. ராசிபுரம்—கை. களத்தூர் (வழி) வெள்ளையூர் .. 2 நடைகள் (புறநகர்)

தனியார் துறை பேருந்து—

1. ராசிபுரம்—கை. களத்தூர் (வழி) வெள்ளையூர் .. 4 நடைகள் (புறநகர்)
2. ஆத்தூர்—கை. களத்தூர் (வழி) வெள்ளையூர் .. 4 நடைகள் (புறநகர்)

புளியங்குறிச்சி, சித்தேரி, ஆறகளூர், பெரியேரி ஆகிய கிராமங்களுக்கு கீழ்க்கண்டவாறு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது:—

1. கள்ளக்குறிச்சி—ஆறகளூர் (வழி) வி.கூட்டுரோடு, பெரியேரி, (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், விழுப்புரம்-கோட்டம்-1) .. 12 நடைகள் (நகர்)
2. ஆத்தூர்—பாக்கம்பாடி (வழி) வி.கூட்டுரோடு, பெரியேரி (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம்-கோட்டம்-1). .. 6 நடைகள் (நகர்)
3. சேலம்—கோவிந்தம்பாளையம் (வழி ஆறகளூர், சித்தேரி (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1). .. 4 நடைகள் (புறநகர்)

தனியார்

4. ஆத்தூர்—கோவிந்தம்பாளையம் (வழி) தலைவாசல், ஆறகளூர், சித்தேரி 2 பேருந்து (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1) 18 நடைகள் (நகர்)

தனியார்

.. 12 நடைகள் (நகர்)

5. தலைவாசல்— புளியங்குறிச்சி (வழி) ஆறகளூர், சித்தேரி (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1) .. 4 நடைகள் (நகர்)

6. ஆத்தூர்— புளியங்குறிச்சி (வழி) சாத்தப்பாடி (தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம்-1). .. 8 நடைகள் (நகர்)

7. சேலம்— கை. களத்தூர் (வழி) புளியங்குறிச்சி ... 4 நடைகள்

8. ஆத்தூர்— கை. களத்தூர் (வழி) புளியங்குறிச்சி .. 2 நடைகள் (புறநகர்)

9. ராசிபுரம்— பில்லாங்குளம் (வழி) தலைவாசல், புளியங்குறிச்சி) .. 4 நடைகள் (புறநகர்)

10. சேலம்— புளியங்குறிச்சி (வழி) சாத்தப்பாடி (தனியார்) .. 6 நடைகள் (புறநகர்)

11. ஆத்தூர்— புளியங்குறிச்சி (வழி) சாத்தப்பாடி (தனியார்) .. 8 நடைகள் (புறநகர்)

கோரிக்கையில் உள்ள வழித்தடப் பகுதி அனைத்தும் மேற்கண்டவாறு பகுதி பகுதியாக பேருந்து வசதி பெற்றுள்ளது. எனவே, மேற்படி வழித்தடங்கள் வி.கூட்டுரோடு, இலுப்பநத்தம், இராமநாதபுரம் சென்று, அங்கிருந்து திருச்சி மற்றும் களக்குறிச்சி சென்றுவர போதுமான பேருந்து வசதியுள்ளது என்பதாலும், கோரியுள்ள வழித்தடத்தில் நேரடி பயணிகள் அடர்வு குறைவாக இருக்கும் என்பதாலும் புதிதாக இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க அவசியம் இருக்காது.

[மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (கும்பகோணம், கோட்டம்-2) லிமிடெட், பெரிய மிளகுபாறை, திருச்சிராப்பள்ளி-1 கடித எண். 6026/11/97-1, ச.ம.பே.செ.(மனு.1), நாள் 5—8—1997.]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 3 | 5798 | திரு. ப. கந்தசாமி, 3-வது வார்டு கவுன்சிலர், ஊர் பொதுமக்கள் சார்பாக, குள்ளக்கவுண்டனூர், கருப்பூர் பேரூராட்சி சேலம்-11. | குள்ளக்கவுண்டனூரி லிருந்து தண்ணீர் தொட்டி வரை உள்ள சாலையை உடன் புதுப்பித்துத்தர ஆவன செய்தல். |

(5)

மனுவில் குறிப்பிட்டுள்ள சாலையானது இத்துறையின் பராமரிப்பில் உள்ள வி.சி.சி. சாலை கி.மீ. 191-லிருந்து குள்ளக்கவுண்டனூர் சாலை வரை இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையை மேம்பாடு செய்து, தார்ச் சாலையாக்க ரூ. 9,23,000-க்கு மதிப்பீடு நபார்டு திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டு, 16—7—1997ல் கண்காணிப்புப் பொறியாளர் நெடுஞ்சாலைத் துறை, அவர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டவுடன் பணி செவ்வனே மேற்கொள்ளப்படும்.

(6)

சாலை மழையினால் பாதிக்கப்படுவதால் சிறு பாலத்தை அமைத்து, சாலையை உடனடியாகப் போட வேண்டும் என்றும், மேலும், சாலையில் தேங்கியுள்ள தண்ணீரை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இது சம்பந்தமான அறிக்கையைக் குழுவிற்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் குழு பரிந்துரை செய்கிறது.

[கோட்டப் பொறியாளர், (நெ.நெ.ப.), சேலம்-7, கோ. (1வ) 8658/97/இல.அ3, நாள். 28—7—1997.]

| வரிசை எண். (1) | மனு எண். (2) | மனுதாரரின் பெயரும் முகவரியும். (3) | மனுவின் சுருக்கம். (4) |
|---|---|---|---|
| 4 | 5341 | திரு. கே. ஏ. குணசேகரன், தமிழ்நாடு மலையாளி (எஸ்.டி.) முன்னேற்ற சங்கம், 10, பழனியப்பா நகர் முதல் தெரு, சேலம்-636 007. | சாதிச் சான்று வழங்குவதில் அரசு நிர்ணயித்த நெறிமுறைகளைப் பின்பற்றுதல். |

துறையின் பதில். (5)

பழங்குடியினருக்கான சாதிச்சான்று வழங்குவதை சரி பார்க்க மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் எனவும், அனைத்து மாவட்டங்களிலும் ஆய்வு செய்து, சரிபார்க்கப்பட வேண்டும் என அரசாணை எண் 2(டி) 18, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 1—4—1997ல் ஆணைகள் வழங்கியுள்ளது. மேற்படி அரசாணை தற்பொழுது நடைமுறையில் உள்ளதால் மனுதாரர் தெரிவித்துள்ள நிலைமைகள் எதிர்காலத்தில் முற்றிலும் தவிர்க்கப்படும் வாய்ப்பு உள்ளது.

அரசாணை எண். 65, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்: 9—4—1997ல் பழங்குடியினரை இட ஒதுக்கீடு விதிப்படி நியமனம் செய்தல், பங்கேற்பு, ஆகியவற்றைக் கண்காணிக்கவும், உறுதி செய்யவும் விரிவாக ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு நிறுவனங்களை ஆய்வு செய்து வேலை முறைப் பட்டியலில் (Roster) சுழற்சியினை மாற்றம் செய்வது குறித்து மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு இறுதியாக்கப்பட வேண்டியவைகளாகும்.

(அரசுச் செயலர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை கடித எண் 17896/97-2, நாள்: 3—9—1997.)

குழுவின் பரிந்துரை. (6)

மாவட்ட ஆட்சித் தலைவரும் சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்ட அலுவலரும், வட்டாட்சியரும் ஒருங்கிணைந்து சாதிச் சான்றிதழ் வழங்குவதில் ஏதேனும் தவறு நேர்ந்திருந்தால் அதனை உடனடியாக நீக்குவதற்கும் கலந்து ஆலோசித்து மூலச் சான்றிதழ் வழங்குவதில் தவறு ஏதும் நடந்து விடாமல் இருப்பதற்குமான நடவடிக்கைகளையும் துரிதப்படுத்த வேண்டுமென்று குழு பரிந்துரை செய்கிறது.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5 | 5402 | திரு. சி. கே. பழனிசாமி மற்றும் சேலம் மாநகர துப்புரவுப் பணியாளர்கள் குடியிருப்பு, அம்மாப்பேட்டை, சேலம்-3. | சேலம் மாநகராட்சி அம்மாப்பேட்டை கிராமத் துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு காலனி பட்டா வழங்கக் கேட்டல். |

துறையின் பதில். (5)

அரசாணை எண் 730, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள்: 14—4—1976 மற்றும் அரசு கடிதம்

குழுவின் பரிந்துரை. (6)

வேறு எங்காவது புறம்போக்கு நிலமிருந்தால் அந்த இடத்தைத் தெரிவு செய்து துப்புரவுப் பணியாளர்கள்

எண் 183, நகராட்சி நிர்வாகம்மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் ; 21—7—1997ன் படியும் மாநகராட்சி மற்றும் நகராட்சிக்குச் சொந்தமான நிலங்களையோ, வாடகைக் குடியிருப்புகளையோ, பட்டா வழங்கவோ, சொந்தமாக்கவோ கூடாது என அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. எனவே துப்புரவு பணியாளர்களின் கோரிக்கையை ஏற்க இயலாது.

(ஆணையாளர், சேலம் மாநகராட்சி, கடிதம் எண் இ4/21149/97, நாள் ; 10—7—1997.)

ஓய்வு பெற்றுச் செல்லும்போது அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யலாம் என குழு பரிந்துரை செய்கிறது.

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 6 | 5812 | தியாகி கே. எஸ். ரங்கசாமி, தலைவர், பாரதமாதா வாலிபர் சங்கம், பொன்னம்மாபேட்டை, சேலம்-1. | (1) சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு பொன்னம்மாபேட்டை, வீராணம் செல்லும் நகரப் பேருந்துகளில் அதிக மக்கள் பயணம் செய்து வருவதால் நகரப் பேருந்துகள் தற்போது இருப்பதைவிட 25 சதவீதம் கூடுதல் பேருந்துகள் இயக்க வேண்டும்.<br>(2) அதேபோல் வெளியூர் செல்லும் பேருந்துகளையும் தற்போது இருப்பதைவிட 15 சதவீதம் அதிக எண்ணிக்கையில் பேருந்துகள் விடவேண்டும். |

| துறையின் பதில். | குழுவின் பரிந்துரை. |
|---|---|
| (5) | (6) |
| (1) சேலம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு பொன்னம்மாபேட்டை-வீராணம் செல்லும் தடத்தில் அரசுப் போக்குவரத்துக்கழக 8 பேருந்துகள் மூலம் 94 நடைகள், 3 தனியார் பேருந்துகள் மூலம் 84 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் அரசுப் போக்குவரத்து பேருந்துகளின் பயணிகள் பிரயாணம் தராசரியாக 60 சதவீதம் உள்ளது. எனவே, தற்போது பொன்னம்மாபேட்டை, வீராணம் போன்ற ஊர்களுக்கு அளிக்கப்பட்ட பேருந்து வசதி போதுமானது எனக் கருதப்படுகிறது. மேலும், அரசின் வழிக்காட்டுதல்களின் படி பேருந்து வசதியேயில்லாத இடங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியுள்ளதால், மனுதாரரின் கோரிக்கையின் அடிப்படையில் பரிசிலிக்கப்படுப.<br>(2) மனுதாரர் பொதுவாக வெளியூர் (புறநகர்) பேருந்துகளில் கூட்டம் அதிகமாக உள்ளதால், தற்போது இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கையில் 15 சத | புதிய பேருந்துகள் ஒதுக்கப்படும்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகச் சேலம் கோட்டத்திற்கு கூடுதலாகப் பேருந்துகளை ஒதுக்கித்தர வேண்டுமென குழு பரிந்துரை செய்கிறது. |

விகிதத்திற்கு அதிக பேருந்துகள் இயக்க வேண்டுமெனக் கேட்டுள்ளார். இன நெரிசல் மிகுந்த புறநகர் வழித் தடங்களில் அவ்வப்போது பேருந்துகளின் எண்ணிக்கை தேவைக் கேற்ப அதிகரிக்கப்பட்டு வருகிறது.

(மேலாண் இயக்குநர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் சேலம்–7, கடித எண் 642-1/வ7/அபோக/97, நாள் : 31–7–1997.)

| வரிசை எண். (1) | மனு எண். (2) | மனுதாரரின் பெயரும் முகவரியும். (3) | மனுவின் சுருக்கம். (4) |
|---|---|---|---|
| 7 | 5237 | திரு. பி. எ. ஜாஜா, முன்னாள் ஊராட்சி உபதலைவர், சின்னையாபுரம், தாசநாய்க்கன்பட்டி. | சின்னையாபுரத்தில் பள்ளிக் கட்டிடம் கட்டவும், சத்துணவுக் கூடக் கட்டிடம் கட்டவும், சர்வே எண் 66/2ல் 0.29.0 கல்வாங்குத்து புறம்போக்கு நிலத்தை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பெயருக்கு மாற்றம் செய்து தரக் கோரல். |

துறையின் பதில். (5)

மனுவில் குறிப்பிட்டுள்ள சின்னையாபுரத்தில் 1994–95ஆம் நிதி ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் புதிய பள்ளிக் கட்டிடம் கூட்ட நிதி ஒதுக்கீடு பெற்றுசர்வே எண் 66/2-ல் பள்ளிக் கட்டிடம் 1996ல் கட்டி முடிக்கப்பட்டு தற்போது புதிய கட்டிடத்தில் பள்ளி இயங்கி வருகிறது. அப்பள்ளியில் 79 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இரு ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். மாணவர்கள் வருகைக்கு பள்ளியில் தற்போது போதுமான இடவசதி உள்ளது. சத்துணவு கூடம் கட்டவும், பள்ளியைச் சுற்றி அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் காலியாக உள்ளது.

குழுவின் பரிந்துரை. (6)

மேற்படி நிலத்தை ஆக்கிரமிப்புகளிலிருந்து கவிர்க்கும் பொருட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குப் பட்டா மாற்றம் செய்துக் கொடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவரை குழு கேட்டுக் கொள்கிறது.

(ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், பனைமரத்துப்பட்டி. ந.க. எண் 3109/97/அ5, நாள் : 2–1–1998.)

| வரிசை எண் (1) | மனு எண் (2) | மனுதாரரின் பெயரும், முகவரியும். (3) | மனுவின் சுருக்கம். (4) |
|---|---|---|---|
| 8 | 5814 | திரு. ஆர். இராசகோபால், அம்பேத்கர் தற்பணி மன்றம், எஸ். வாழப்பாடி, சேலம் மாவட்டம். | தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்/சேலம் மண்டலம் அலுவலகத்தை ஈரோட்டிலிருந்து சேலத்திற்கு மாற்றுவது தொடர்பாக. |

துறையின் பதில். (5)

இது குறித்து தமிழ்நாடு மின்வாரியத் தலைமையகம் தான் முடிவு எடுக்க வேண்டும். 8—8—1997 அன்று தலைமைப் பொறியாளர்/பணி அமைப்பு/சென்னை அவர்களுக்கு தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்/சேலம் மண்டலம் அவர்களால் மனு அனுப்பப் பட்டுள்ளது. வாரியம் எடுக்கும் முடிவு தெரிந்த பின் தான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

(மேற்பார்வைப் பொறியாளர், சேலம் மின் பகிர்மான வட்டம், சேலம்.)

குழுவின் பரிந்துரை. (6)

மனுதாரரின் கோரிக்கையிலுள்ள நியாயத்தினை உணர்ந்த குழு மனுதாரர் கோரியவாறு தலைமைப் பொறியாளர்/பகிர்மானம்/சேலம் மண்டலம் அலுவலகத்தை ஈரோட்டிலிருந்து சேலத்திற்கு மாற்ற பரிந்துரை செய்கிறது.

| வரிசை எண். (1) | மனு எண். (2) | மனுதாரரின் பெயரும், முகவரியும். (3) | மனுவின் சுருக்கம். (4) |
|---|---|---|---|
| 9 | 5833 | திரு. அ. பெரியசாமி (ஊர் பொதுமக்கள் சார்பாக) பூசாரியூர் காட்டுவளவு, தப்பக்குட்டை அஞ்சல், சங்ககிரி தாலுக்கா, சேலம் மாவட்டம். | மயானப்பாதை அமைக்க வேண்டியது குறித்து. |

துறையின் பதில். (5)

மனுதாரர் கோரிய பாதை பட்டா நிலத்தில் செல்கிறது. பட்டா நிலத்தில் பட்டாதாரர்கள் மயானம் வரை செல்ல தடுப்பதில்லை. நில உடமைதாரர்கள் பாதைக்கு என நிலம் வழங்க மறுக்கின்றனர். எனினும் பட்டாதாரர்களை நேரில் சந்தித்து நடவடிக்கை மேற்கொண்டு பாதை வசதி விரைவில் செய்து கொடுக்கப்படும். (வட்டாட்சியர், சங்ககிரி, ந. க. 7451/97 (எப்) நாள் : 25—11—1997.)

குழுவின் பரிந்துரை. (6)

ஊராட்சி, பணம் ஒதுக்கினால் இந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வாய்ப்புள்ளதாக திட்ட அலுவலர் கூறியதை குழு ஏற்றுக் கொண்டு நில ஆர்ஜிதத்திற்கு இயலுமா என்பதை சங்ககிரி வட்டாட்சியரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கண்டறிந்து அதை திட்ட அலுவலருக்கும் தெரிவித்து பணியினை விரைவில் முடித்துத் தர வேண்டும் என்று குழு பரிந்துரை செய்கிறது.

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 10 | 5344 | திரு. சி. பரமேஸ்வரன்,<br>இயக்குநர்,<br>சங்ககிரி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்,<br>சந்தைப்பேட்டை, சங்ககிரி அஞ்சல்,<br><br>துறையின் பதில். | சங்ககிரி பேரூராட்சி பகுதியை சேர்ந்த சந்தைப்பேட்டை பகுதிக்கு புதிய ஆழ்துளைக் கிணறு அமைத்துக் கொடுப்பது.<br><br>குழுவின் பரிந்துரை. |
| | | (5) | (6) |
| | | மனுதாரர் திரு. சி. பரமேஸ்வரன் என்பவர் குறிப்பிட்டிருக்கும் சந்தைப்பேட்டை மேட்டு பகுதி மலை அடிவார பகுதியாகும். இப் பகுதியில் 60 குடியிருப்புகள் இருக்கின்றன. இப் பகுதிக்கு காவிரி குடி நீர் திட்டத்தின் கீழ் மூன்று பொதுக்குழாய்கள் அமைக்கப்பட்டு சுழற்சி முறையில் குடி நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் இப் பகுதியில் 15 வீடுகளுக்கு தனியார் வீட்டு இணைப்பு கொடுக்கப்பட்டு அதன் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சந்தைப் பேட்டையிலுள்ள கோயில் முன் புறம் உள்ள நார்வாய் என்ற பெரிய குளத்தில் உள்ள தண்ணீரையும், ஆழ்துளைக் கிணறு மூலமும் அப் பகுதி மக்கள் அன்றாட தேவைக்கு உபயோகப்படுத்தி வருகிறார்கள்.<br><br>மனுதாரர் குடி நீர் குழாய் செல்லும் பகுதியிலிருந்து 40 அடி உயரத்தில் மலை மேல் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். அப் பகுதியில் ஆங்காங்கு 5 வீடுகள் பரவலாக இருக்கின்றன. மேட்டு பகுதியாக இருப்பதால் குழாய் மூலம் தண்ணீர் ஏறுவது இல்லை. இவர் மனுவில் காவிரி குடி நீர் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் குடிநீருக்காக 2 பர்லாங்குகள் செல்ல வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும். இருப்பினும் மலைப்பகுதி என்பதால் ஆழ்துளைக் கிணறு அமைக்க இயலாத நிலையுள்ளதால் சுமார் 100 அடி தூரத்தில் மலை அடிவார சந்தைப் பேட்டை பகுதியில் ஆழ்துளைக் கிணறு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 31—01—1998 க்குள் ஆழ் துளை கிணறு நிறுவி தரப்படும்.<br><br>(உதவி இயக்குநர், (பேரூராட்சிகள்) சேலம் மண்டலம் (கோப்பு எண் 5/98.) | அருகில் உள்ள நிலத்தடி தண்ணீர் வசதி உள்ள இடத்தில் ஆழ் துளைக் கிணறு அமைக்க குழு பரிந்துரை செய்கிறது. |

C 53 438—3

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 11 | 5262 | திரு. எஸ். கே. ராஜு 4வது வார்டு கவுன்சிலர் எருமாப்பாளையம் ஊராட்சி, சேலம். | எருமாப்பாளையம் மற்றும் சன்யாசிகுண்டு கிராமங்களுக்கு இடையில் உள்ள நடுநிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக நிலைஉயர்த்துதல் குறித்து. |

துறையின் பதில். குழுவின் பரிந்துரை.

(5)

எருமாப்பாளையம் மற்றும் சன்யாசிகுண்டு கிராமங்களில் தற்போது தலா ஒரு துவக்கப்பள்ளி மட்டும் இயங்கி வருகிறது. நடுநிலைப்பள்ளிகள் இல்லை துவக்கப் பள்ளியை நேரடியாக மேல்நிலைப்பள்ளியாக நிலை உயர்த்த விதிகளில் இடமில்லை. துவக்கப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்திய பின் தான் உயர் நிலைப்பள்ளியாக நிலை உயர்த்த வேண்டும். 1998-99 ம் ஆண்டில் அப்பள்ளியினை நடுநிலைப்பள்ளியாக உயர்த்துவதற்கு உரிய கருத்துருக்கள் சேலம் ஊரகம் உதவி தொடக்கக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. மேற்படி கருத்துருகுலள சேலம் மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் கடிதம் ந.க.எண். 15760/எ2/97-நாள் 2-1-1998ன் படி தொடக்கக்கல்வி இயக்குநருக்கு பரிந்துரைப்பி வைக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் 1998-99 ம் ஆண்டில் (ஜூன் 98ல்) நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்படும்.

(6)

8,000 குடும்பங்கள் உள்ள கிராமங்களுக்கிடையில் இந்தப்பள்ளி இருப்பதால் 1998—99 ல் நடுநிலைப்பள்ளியாகவும் 1999—2000-த்தில் உயர்நிலைப்பள்ளியாகவும் நிலை உயர்த்த மலுக்கள் குழு அரசுக்கு பரிந்துரை செய்கிறது.

(முதன்மைக்கல்வி அலுவலர், சேலம். கடிதம் எண்.ந.க.11963/எ3/97. நாள்,02-01-1998.)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 5813 | திரு.கே. பாலசுப்பிரமணியம், வட்டார தலைவர், தமிழ்மாநில காங்கிரஸ் பனமரத்துப்பட்டி சேலம் மாவட்டம் | 1. பனமரத்துப்பட்டியிலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் பழுதுப்பட்ட கட்டிடத்தினை சரி செய்ய கேட்டல்.<br>2. பள்ளிக்கு சுற்றுச்சுவர் கட்டகேட்டல்.<br>3. பள்ளிக்கு மின் வசதி செய்து தரக் கேட்டல். |

துறையின் பதில்.

(5)

1. பழுதுகள் சரி பார்க்க சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது ந.க.12518/97/க2- நாள் 21-11-97ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. வேலை நடைபெற்று வருகிறது.

2. பள்ளிக்கூடத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படும் எத்திட்டத்திலும் வழிவகை இல்லை.

3. மின்சார ஒயரிங் செய்து தர டான்சி நிறுவனத்திற்கு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்திரவு எண். 12158/97எக்ஸ்2, நாள் 19-6-97ன்படி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது விரைவில் வேலை செய்து முடிக்கப்படும்.

(ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம், பனமரத்துப்பட்டி ந.க.எண் 3109/97-அ5 நாள் 2-1-1998.)

(6)

துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 2 | 5809 | திரு எ. காசி ஊராட்சி மன்றத்தலைவர், இராமநாயக்கன் பாளையம், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். | சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன் பாளையம், அய்யங்காடு முயல்கரடு ஆகிய இரண்டு பகுதிகளையும் இணைத்து சிறிய அணை கட்ட கோருதல். |

துறையின் பதில்

(5)

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன் பாளையத்தில் மலையாற்றின் குறுக்கே எரி கட்டும் திட்டத்திற் கான மதிப்பீடு 1997-98ம் ஆண்டு விலை விகிதத்தின்படி ரூ. 861 இலட்சத்திற்கு தயாரித்து கண்காணிப்பு பொறியாளர் நீ.ஆ.அ. தி & உ வட்டம் சேலம் அவர்கள் க.எண். 277 தபொ[97/வஅ2/கே3569-நாள்

(6)

துறையின் பதில் படித்து பதிவு செய்யப்பட்டது.

துறையின் பதில். குழுவின் பரிந்துரை

17-9-1997ல் தலைமைப்பொறியாளர் நி.ஆ.அ.திட்டம் சென்னை அவர் களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அவரது பரிசீலனைக்குப்பின் அரசின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும்

(செயற்பொறியாளர் பொ.ப.து. திட்டங்கள் நிர்வாகம் மற்றும் வடிவமைப்பு கோட்டம் சேலம்-636007. எம்./வடி/கோ122-97/தேவ.அ3-நாள் 23-10-1997)

| வரிசை எண். | மனு எண் | மனுதாரர்கள் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 5. | 5243 | திரு. என். கே. செல்வராஜ் தலைவர் தமிழ் மாநில காங்கிரஸ் தலை வாசல் வட்டாரம் ஆத்தூர் வட்டம் சேலம் மாவட்டம். | ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு இடம் ஒதுக்கி தரக்கேட்டல் |

துறையின் பதில்,

(5)

சேலம் மாட்டம், ஆத்தூர் வட்டம் மும்முடி கிராம ச. நெ. 10/2-ல் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு இடம் ஒதுக்கி தர கேட்கப்பட்டது. இதன் பேரில் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வலுவலகத்திலிருந்து பராதின முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு கோட்டாட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் தலத் தணிக்கை செய்து உள்ளனர்.

பிரஸ்தாப புலத்தில் சுமார் 0.15 சென்ட் பரப்பளவுள்ள நிலத்தில் முஸ்லீம் தொழுகை மேற்கொண்டு அனுபவத்தில் உள்ளது. இதனை அடுத்து தலைவாசல் மற்றும் மும்முடி கிராமங்களுக்கு குடிநீர் வழங்க கிணறு ஆற்றில் வெட்டப்பட்டு அதிலிருந்து இந்த நிலத்தின் வழியாக பைப் மூலம் கொண்டு செல்லப்பட்டு வருகிறது. மேற்படி இடம் ஆற்றுக்கு செல்லும் பாதையாக அமைந்துள்ளது பிரஸ்தாப புலம் சேலம்-சென்னை நெடுஞ்சாலையிலும் திருச்சி செல்லும் பிரிவு பாதையும் உள்ளடக்கிய மிக முக்கியமான பகுதியாகும் எதிலே இடம் பிடிப்பது மிக்க இடமாக கருதப்படுகிறது. மேற்படி பிரஸ்தாப புலத்தை தணிக்கை செய்த மாவட்ட வருவாய் அலுவலர் மேற்கூறப்பட்ட காரணத்தால் தடையாணை புத்தகத்தில் பதிவு செய்து ஆணையிட்டுள்ளனர். இது தவிர வேறு தகுதியான அரசு புறம்போக்கு நிலங்கள் மும்முடி கிராமத்திலும், தலைவாசல் கிராமத்திலும் இல்லை ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு கூட்டுறவுத்துறையினர் தகுந்த பட்டா நிலங்களை தேர்வு செய்து தெரிவித்தால் தானாக முன் வந்து நிலம் வழங்கும் சட்டப்படி (Private Negotiation) Act) நிலம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

(கலெக்டர், ஆத்தூர், எண். 1543/97 நாள்: 31 — 12 — 1997.)

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

(5)

திரு வரகவுண்டனூர் மேத்தா நகரில் உள்ள பகுதி களில் மழைநீர் வடிகால் வசதி செய்ய ரூ. 4 லட்சத் தில் மதிப்பீடுதயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணி 1998-99-ம் ஆண்டில் முன்னுரிமை வழங்கி செய்யப்பட வுள்ளது.

(ஆணையாளர், சேலம் மாநகராட்சி, கடித எண் 20691, நாள் 25—6—1997.)

(6)

துறையின்பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும் | மனுவின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 3 | 5360 | திரு.ஜி.ஏ.கண்ணன், ஊராட்சி மன்ற உறுப்பினர் எருமாப்பாளையம் ஊராட்சி, களாம்பட்டி, சேலம்-15 | 2வது வார்டு களரம்பட்டி புத்துமாரியம்மன் நகர். எருமாப்பாளையத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பது சம்பந்தமாக. |

துறையின் பதில்.

(5)

5 கி.மீ. சுற்றளவில் எந்த அரசு மருத்துவமனை ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாமல் இருக்க வேண்டும் ஆனால் களரம்பட்டி எருமாப்பாளையத்தில் இருந்து 2 கி.மீ. தூரத்தில் அரசு மோகன் குமார மங்கலம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை உள்ளது. எனவே, களரம்பட்டி எருமாப் பாளையத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க இயலாது. எருமாபாளையத்தில் தற்சமயம் ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகின்றது.

(துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், சேலம்-1, க.எண். 13181/96 நாள் 28-2-1997.)

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதில் படித்து பதிவுசெய்யப்பட்டது.

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 4 | 5232 | திரு. பி. குப்புசாமி, 51-ஏ, மேற்கு மேம்பாலை நகர் (மேற்கு மேத்தா நகர்), திருவாகவுண்டனூர், சேலம்-5. | வார்டு எண். 24, மேற்கு மேம்பாலை நகர் சாக்கடை வசதி குறித்து. |

| வரிசை எண். (1) | மனு எண் (2) | மனுதாரரின் பெயரும் முகவரியும். (3) | மனுவில் சுருக்கம். (4) |
|---|---|---|---|
| b. | 5251 | கி. மணி, பெ. கிருஷ்ணக்கவுண்டர் பூசாரி தோட்டம், பெரியேரி, ஆட்டுப்பண்ணை (அஞ்சல்) ஆத்தூர் 636112 | மனுதாரரின் நிலத்திற்கு அருகில் உள்ள திருவாளர்கள் சிவா அக்ரோ கெமிக்கல்ஸ் தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றப்படும் திடக் கழிவுகளால் நிலத்தடி நீர் மாசுபடுவதை நீக்குவது குறித்து. |

துறையின் பதில்.

(3)

மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள திருவாளர்கள் சிவா அக்ரோ கெமிக்கல்ஸ் என்ற நிறுவனமானது 28—6—1997 அன்று ஆய்வு செய்யப்பட்டது ஆய்வின்பொழுது தொழிற்சாலை திடக்கழிவுகளை நிலத்தில் கொட்டி வைத்திருப்பது அறியப் பட்டது. ஏற்கெனவே இது சம்பந்தமாக தலைவர் பெரியேரி ஊராட்சி அவர்களிடம் இருந்து புகார் 7—3—1997 அன்று பெறப்பட்டு, தொழிற்சாலை ஆய்வு செய்யப்பட்டு திடக் கழிவுகளை நன்றாக அலசி நச்சுத்தன்மை நீக்கிய பின்பு மூடப்பட்ட தொட்டியில் கொட்டவும் வைக்குமாறு தொழிற் சாலைக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் அதிக அளவில் திடக கழிவுகள் உற்பத்தியாகும் பொருட்களை தயாரிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டு தற்போது அப்பொருட் கள் தயாரிப்பு நிறுத்தி வைக்கப்பட்டுளளது

ஏற்கெனவே உற்பத்தியாகி நிலத்தில் கொட்டப்பட்டுள்ள திடக்கழிவுகளை நன்றாக நீரில் அலசி நிலத்தடி நீர் பாதிக் காதவாறு தொட்டியில் வைக்குமாறு தொழிற்சாலைக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொழிற்சாலையை சுற்றியுள்ள கிணற்றில் இருந்து நீர் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு சேலம் சுற்றுச்சூழல் ஆய்வகத் திற்கு அனுப்பப்பட்டது.

திருவாளர்கள் சிவா அக்ரோ கெமிக்கல்ஸ் மீண்டும் 26—8—1997 அன்று ஆய்வு செய்யப்பட்டது தற்போது தொழிற்சாலையானது உற்பத்தியில் உண்டாகும் திடக் கழிவு களை தொட்டியில் சேகரித்து வருகிறது மேலும் ஏற்கெனவே உற்பத்தியாகி நிலத்தில் கொட்டப்பட்டிருந்த திடக்கழிவுகள் எல்லாம் தற்போது அகற்றப்பட்டுவிட்டன.

மேலும் திருவாளர்கள் சிவா அக்ரோ கெமிக்கல்ஸ் மீண்டும் 5—11—97 அன்று ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் பொழுது தொழிற்சாலை இயக்கத்தில் இல்லை. தற் போதுள்ள திடக்கழிவுகள் கொட்டிவைக்கும் தொட்டி போது மானதாக இல்லாததால் கூடுதல் தொட்டிகள் கட்டி முடிக் கப்பட்டபின்னரே உற்பத்தியை தொடங்குமாறு தொழிற் சாலைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது

(மாவட்ட சுற்றுப்புற சூழல் நலபொறியாளர் சேலம் கடிதம் எண். கோ. 1511 மாசுகு நபொ புகார் சேலம் 96 நாள் 3—1—1998.)

(4)

குழுவின் பரிந்துரை.

(4)

துறையின் பதில் படித்துப்புரிந்து கொள்ளப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
SATYAMEVA JAYATE
TRUTH ALONE TRIUMPHS

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும் | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 7 | 5415 | திரு. எஸ். கோவிந்தராசு, தலைவர், தலவாய்பட்டி ஊராட்சி, ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். | தலவாய் பட்டி ஊராட்சியை சேர்ந்த திருவள்ளுவர் நகர் மேட்டுப்பாளையம் எம்.ஜி.ஆர். நகர் அம்பேத்கர் நகர், ஆகிய குக்கிராமங்களுக்கு ஆழ்துளை கிணறு ஏற்படுத்தி கைபம்பு பொருத்தி கொடுப்பது குறித்து. |

துறையின் பதில்.

குழுவின் பரிந்துரை.

(5)

(6)

ஊரட்சி நிவாரணத்திட்டத்தின் கீழ் திருவள்ளுவர் நகரில் ஆழ்துளைக்கிணறு அமைக்கப்பட்டு கைப்பம்பு பொருத்தப்பட்டு தற்சமயம் நல்ல முறையில் இயங்கிவருகிறது. பத்தாவது நிதிக்குழு நிதி உதவியில் தலவாய்பட்டி ஏரிக்கரையில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு கைபம்பு பொறுத்தப்பட்டுள்ளது. ஏனைய குக்கிராமங்களுக்கு வரும் நிதி ஆண்டில் ஆழ்துளைக் கிணறு முன்னுரிமை அடிப்படையில் அமைத்து தர சேலம் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு பரிந்துரை செய்யப்பட உள்ளது.

துறையின் பதில் படிந்து பதிவு செய்யப்பட்டது.

(ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் பெத்த நாய்க்கன் பாளையம் கடித எண். 15/97 நாள். 1—7—1997)

| வரிசை எண். | மனு எண் | மனுதாரரின் பெயரும் முகவரியும் | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 8 | 6708 | திரு. பெ. சுந்தரராஜன், மற்றும் விவசாயிகள், மல்லிக்குட்டை கிராமம் மற்றும் அஞ்சல், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம். | மல்லிக்குட்டை கிராமத்திற்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்கவேண்டுவது குறித்து |

துறையின் பதில்

குழுவின் பரிந்துரை.

(5)

(6)

தொளசம்பட்டி பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட மல்லிக்குட்டை கிராமம் நங்கவள்ளி எல்லாஞ்சார் 11 கேவி மின்தொடர் மூலம் மின்விணியோகம் செய்யப்படுகிறது. மேற்படி எல்லாஞ்சார் 11 கேவி உயர் அழுத்த மின் தொடரானது கிராமபுற மின் தொடராகும், (புறநகர்) வாரியவிதிகளின்படி புறநகர் உயர் அழுத்த மின்தொடர்களுக்கு பகலில் 6 மணி நேரம் மும்முனை மின்சாரமும் இரவில் 8 மணி நேரம் மும்முனை மின்சாரமும் ஆக மொத்தம் 14 மணி நேரம் மும்முனை மின்சாரமும் மீதமுள்ள 10 மணி நேரங்களுக்கு ஒருமுனை மின்சாரமும் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே மனுதாரர் வேண்டுகோளினபடி

துறைபின் பதில்படித்துப் பதிவு செய்யப்பட்டது.

24 மணிநேரமும் முழுமூலை மின்சாரமும் வழங்க வேண்டும் என்றால் கீழ்க்கண்ட விதிகளுக்கு உட்பட்டு இருந்தால்தான் 24 மணி நேர மின்சாரம் வழங்க இயலும்.

1. புறநகர் உயர் அழுத்த மின்தொடரின் மொத்த பளுவில் 50 சதவீதத்திற்கு மேல் தொழில் முறை மின் இணைப்புகளின் பளுவானது இருக்கவேண்டும்.

2. புறநகர் உயர் அழுத்த மின்தொடரின் மொத்த பளுவில் 70 சதவீத்திற்கு மேல் உயர் அழுத்த மின் பளுவும் தாழ்வு அழுத்த தொழில்முறை மின் இணைப்புகளின் பளுவும் இருக்க வேண்டும்.

3. புறகர் உயர் அழுத்த மின்தொடரில் 300 எண்ணிக்கை தாழ்வு அழுத்த தொழில்முறை மின் இல்ணைப்புகள் இருக்க வேண்டும்.

4. புறகநர் உயர் அழுத்த மின்தொடரின் உயர் அழுத்த குடிநீர் வழங்கும் மின் இணைப்புகளும் உயர் அழுத்த மருத்துவமனை மின் இணைப்புகளும் இருக்க வேண்டும்.

ஆனால் நங்கவள்ளி-எல்லாபுரம் 11 கேவி மின்தொடரில் 139 குறைந்த அழுத்த தொழில் முறை மின் இணைப்புகள்தான் உள்ளன. மேலும் யாதொரு உயர் அழுத்த மின் இணைப்பும் இல்லை. ஆகவே நங்கவள்ளி-எல்லாபுரம் 11 கேவி மின் தொடரானது புறநகர் மின்தொடராக 14 மணி நேர முழுமூலை மின்சாரம் வழங்கப்பட்டுவருகிறது.

(உதவி செயற்பொறியாளர் இ. பராமரிப்பு தமிழ்நாடு மின் வாரியம் தாரமங்கலம், கடிதம் எண். உ. செ. பொ. இப. /தாரை எ. முகாம் /944/97, நாள் 2—8—1997.

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 9 | 5307 | திரு. கி. வீரமணி காமராஜ் நகர். கோனூர் அஞ்சல். மேட்டூர் வட்டம். | கோனூர் மேற்கு கிராமம், காமராஜ் நகரிலுள்ள 20 வீடுகளுக்கு மின் இணைப்பு வசதி மற்றும் தெருவிளக்கு வசதி அளிப்பது குறித்து. |

துறையின் பதில்
(5)

மேட்டூர் வட்டம் கோனூர் கிராமம் காமராஜர் நகரில் உள்ள 12 வீட்டு மின் இணைப்புகளும் 2 தெரு விளக்கு கம்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் நகரப் பகுதியாக இருப்பதால் குடிசை மின் இணைப்பு கோரி இது நாள் வரை விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை மனுதாரரின் தந்தையார் திரு. கே. வி. சின்னப்பன் அவர்களின் பெயரில் மின் இணைப்பு எண். 10 மற்றும் மி.இ. எண். 58 மீ. 4—5—1969ம் 29—11—1997ம் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. திரு. கே.வி. சின்னப்பன் காலமான பின்பு அண்ணன் தம்பி தகராறு காரணமாக திரு. கி. வீரமணியின் வீட்டிற்கு மின் இணைப்பு எண். 58ன் மூலமாக மின்சாரம் பெறும்

குழுவின் பரிந்துரை
(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

ஓய்கினை. திரு. வீரசம்பு தனது விட்டினுள் துண்டித்துவிட்டார். வீட்டையும் காலி செய்து கதவை பூட்டி விட்டுதோட்டத்தில் குடியேறிவிட்டார் வீரமணி மற்றும் அப்பாவு இருவரும் புதிய மின் இணைப்பு கோரி 2—1—93 அன்று விண்ணப்பித்தனர் அவர்கள் வீட்டிற்கு புதிய மின் பாதை அமைத்துதான் மின் இணைப்பு வழங்க இயலும் அவ்வாறு புதிய மின்பாதைபட்டா தாரரின்நிலத்தின மீது அமைக்கவேண்டி உள்ளது. அந்த நிலத்தின் சொந்தக்காரர்கள் வக்கீல் மூலம் ஆட்சேபணை தெரிவித்துள்ளனர். ஆனால் வீரமணி புதிய மின் பாதை அமைக்கு மிடமானது நடைபாதை என்றும் பொது இடம் என்றும் கூறுவதனால் வருவாய் வட்டாட்சியரடமிருந்து அதற்கு உண்டான சான்றுதல் பெற்று தருமாறு கோரப்பட்டது. அதன்படி திரு. சி. வீரமணி 5—5—1997 அன்று வருவாய் வட்டாட்சியடமிருந்து சான்றிதழ் வாங்கி கொடுத்துள்ளனர். அதன் மீது பாதை அமைக்கும் இடமானது தனியார்க்கு சொந்தமான பட்டா நிலம் என்றும் அவர்கள் ஆட்சேபணை தெரிவித்ததால் புதிய மின்பாதை அமைக்க தடையில்லா சான்றிதழ் வழங்க இயலாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய மின் பாதை அமைக்க ஆட்சேபணை தெரிவித்தவர்களில் அவரது அண்ணன் திரு. வீரசம்பு மற்றும் தம்பி ராமராஜன் உள்ளனர். திரு. சி. வீரமணி அவர்கள், தனது அண்ணன் தம்பிகளிடமும் மற்றும் மின் பாதை செல்லும் வழியில் இடத்தின் சொந்தக்காரர்களிடமும் சுமுகமாக பேசி மின்பாதை அமைக்க வழிவகை செய்து கொடுத்தால்தான் உடன் மின் பாதை அமைத்து மின் இணைப்பு வழங்க ஏதுவாக இருக்கும், இல்லையென்றால் வாரிய விதிகளின்படி மின் பாதை அமைக்க மின் இணைப்பு கோரும் நபர் வழி வகை செய்து கொடுக்காததினால் விண்ணப்பத்தை தள்ளுபடி செய்யபரிந்துரை செய்யப்படும்.

(உதவி செயற் பொறியாளர் இயக்கமும் பராமரிப்பும் தமிழ்நாடு மின்சார வாரியம் சாம்பள்ளி: கடிதஎண். 592 1997, நாள் 28—6—1997.)

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 10 | 5443 | திரு கே.ஆர். துரைசாமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர், பாரதிய ஜனதா கட்சி, கருமந்துறை அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். | சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் கருமந்துறை உண்டு உறையுள் உயர் நிலைப்பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல். |

துறையின் பதில்

(5)

கல்ராயன் மலையில் ஆத்தூர் வட்டம் கருமந்துறையைச் சேர்ந்த சுற்றுப்புறப் பகுதியில் இந்த உயர் நிலைப்பள்ளியினைத் தவிர்த்து வேறு உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளிகள் இல்லாததால் இப்பள்ளியினை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

குழுவின் பரிந்துரை

(6)

துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

(மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர், (பொறுப்பு), சேலம் கடித எண். 67597/96 நாள் 8—10—1996.

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும் | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 11 | 5797 | திரு. இஸ். சினிவாசன், (பொதுமக்கள் சார்பாக) அம்பேத்கார் தெரு, ஆறகளூர் கிராமம், கெங்கவல்லி வட்டம். | ஆறகளூர் கிராமத்தில் ஒரு விளக்கு மின்கம்பத்தின் கீழ் வீடுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டதில் குறைகளை நீக்குதல். |

| | துறையின் பதில். | குழுவின் பரிந்துரை. |
|---|---|---|
| | (5) | (6) |
| | விதிமுறையை மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அபராதத் தொகை ரூ. 1,825 வசூலிக்கப்பட்டது. | துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது. |
| | ஆய்வு செய்யப்பட்ட குடிசை விடுகளின் எண்ணிக்கை 49<br>விதிமுறையை மீறியவர்களின் எண்ணிக்கை 18 | |
| | மேற்படி 18 விதிமீறல்களில் அதிகப்படியான பழு விவரம் | |
| | 1 அதிகப்படியான விளக்குகளின் எண்ணிக்கை 29 | |
| | 2 மிக் விதிறிகள் 14 | |
| | 3 மின் மோட்டார்கள் 6 | |
| | 4 தொலைக்காட்சிப் பெட்டிகள் 1 | |
| | (மேற்பார்வைப் பொறியாளர், சேலம் மின்பகிர்மான வட்டம், சேலம். | |
| | கடித எண் : சேமிபவ/மதொஅ/கோ.ம.கு/எண். 467/97, நாள் 18—9—97.) | |

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | மனுவின் கருக்கம். |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 12 | 5830 | திரு. எஸ். உமாசங்கர், பி.காம், அன்னை இந்திரா காந்தி நகர், அழகாபுரம், மிட்டாபுதூர், சேலம்-16. | 1 இந்திரா காந்தி நகரில் குழிவுநீர் தேங்குவதை வெளியேற்றவும், புதியதாகக் குழிவுநீர் வாய்க்கால் அமைக்கவும் குப்பைகள் அகற்றுதல்.<br>2 மிட்டாபுதூரில் இருந்து குழிவுநீர் பாதை பாதியிலேயே உள்ளதால் புதியதாகக் கட்டுதல். |
| | | துறையின் பதில் | குழுவின் பரிந்துரை. |
| | | (5) | (6) |
| | | இந்திரா காந்தி நகரில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள சாக்கடை கால்வாய் அவ்வப்பொழுது சுத்தம் செய்து கொசு மருந்து அடிக்கடி தெளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆழ்துளைக்குழாய்க் கிணறு சுற்றிலும் மண்கொட்டி குழிவு நீர் தேங்காமல் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குப்பைகள் அகற்றப்பட்டது. அழகாபுரம் மிட்டாபுதூர் ஏற்கனவே கிராம பஞ்சாயத்தாக இருந்தது. 1—6—1994 நாள் முதல் தான் மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கட்டப்பட்டுள்ள கால்வாய் பஞ்சாயத்து | துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது. |

நிர்வாகத்தின் போது கட்டப்பட்டு முழுமை பெறாமல் இருக்கிறது. தற்போது வீடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ளன. விடுபட்டுள்ள கால்வாயிலிருந்து அருகிலுள்ள ஓடை வரை கால்வாய் கட்ட வேண்டுமென்றால் சுமார் 1 கி.மீ. நீளம் கட்ட வேண்டும். வீடுகளும் முழுமையாக இல்லை. மேற்படிக் கால்வாய் முழுவதும் கட்டத் தோராயமாக ரூ. 7.00 லட்சம் செலவு ஆகும். 1997—98 நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. 1998—99 நிதியாண்டில் அரசால் வழங்கப்படும் அடிப்படை வசதித் திட்டத்தின் கீழ் எடுத்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆணையர், சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டல அலுவலகம் கடிதம். ந.க. எண். ஜே. 11/3679/97, நாள் 31—7—1997)

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும் | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 13 | 5820 | திரு. எ. அண்ணாமலை, தலைவர் கிராமதான கிராம சபை சொக்கநாதபுரம் கிராமம், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். | ஏரி புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோருதல். |

| துறையின் பதில் | குழுவின் பரிந்துரை. |
|---|---|
| (5) | (6) |
| சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் சொக்கநாதபுரம் கிராமம் ச.நெ. 140/1 விஸ். 13.56.0 ஹெக் ஏரிப் புறம்போக்கு அரசு நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்த தெரிவிக்கப்படுகிறது.<br><br>பிரஸ்தாப புலத்தில் கீழ் காணும் 4 நபர்கள் கூரைவீடு கட்டி நீண்டகாலமாக தங்களது பட்டா நிலத்துடன் சேர்த்து அனுபவம் செய்து வருகிறார்கள்.<br><br>அதன் விவரம்:<br><br>1 திரு. சன்னாசி, தந்தை பெயர் சின்னப்பிள்ளை.<br><br>2 திருமதி சின்னப்பிள்ளை, கணவர் பெயர், சோலையா பிள்ளை<br><br>3 திருமதி நல்லம்மாள், கணவர் பெயர் புத்திரப்பிள்ளை.<br><br>4 திரு. வேலாயுத உடையார், தந்தை பெயர் அருணாசல உடையார் | தனிக்கை துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது. |

மேற்படி நபர்கள் மிக குறைந்த புரப்பில் கூரைவீடுகள்கட்டி மின் இணைப்பு பெற்று 20 வருடங்களாக அனுபவம் செய்து வருகின்றனர். இதில் புலன் தென்னை மரங்கள் 8 உள்ளன எஸ்.டி.டி. தீர்வை அரசுக்கு செலுத்தி வருகின்றனர். குச்சி சாகுபடி செய்து வருகின்றனர். ஆக்கிரமிப்புதாரர்களுக்கு பட்டா நிலங்கள் இரண்டு ஏக்கர் அளவுக்குதான் உள்ளன. அவர்களுக்கு விவசாயம் தான் தொழில் ஆகும் வேறு தொழில் ஏதும் இல்லை ஆக்கிரமிப்புதாரர்கள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள விவசாயிகள் பட்டாநிலத்துடன் சேர்த்து அனுபவம் செய்து வருகின்றனர். இந்த ஆக்கிரமிப்புதாரர்களின் பாதைக்கோ (அ) ஏரிக்கோ எவ்வித பாதிப்பும் இல்லை. ஏரி கோடி போனாலும் ஆக்கிரமிப்பு பாதம் எவ்விதத்திலும் பாதிப்பு ஏற்படாது என்பதால் இந்த ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த அவசியமில்லை.

(வட்டாட்சியர், ஆத்தூர், கடித எண். 8633/97 நாள் 31—12—1997)

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 14 | 6027 | திரு. கே. கோவிந்தன், முன்னாள் ஊராட்சி உறுப்பினர் மற்றும் பொது மக்கள், நாகிரெட்டியூர் மற்றும் மல்லிக் குட்டை, தாரமங்கலம் வட்டாரம், ஓமலூர் தாலுக்கா. | 1. ஓமலூரிலிருந்து பெரியேரிப்பட்டி, அமரகுந்தி, மல்லிக்குட்டை சின்னசோரகை, நங்கவள்ளி வழியாக மேட்டூருக்கு ஒரு பேருந்து விட வேண்டும்.<br>2. மேட்டூரிலிருந்து சின்னசோரகை தடத்தில் இயக்கப் பட்டு வரும் தடம் எண். 30 பேருந்தை நாகி ரெட்டியூர் வரை நீட்டிக்கவேண்டும்.<br>3. எஸ். 2 பேருந்தின் எல்லா நடைகளும் தொடர்ந்து மல்லிக்குட்டை வழியாக இயக்க வேண்டும்.<br>4. தடம் எண். 11 பேருந்துகளை பகலில் ஒருமுறை மல்லிக்குட்டை வழியாக விருதாசம்பட்டி வரை இயக்க வேண்டும். |

துறையின் பதில்.

(5)

கோரிக்கையில் கேட்கப்பட்ட வழித்தடத்தில் மல்லிக்குட்டை முதல் செங்கிழூர் வரையுள்ள தூரம் 2 கி.மீ. தூரம் நீங்கலாக அனைத்து தடப்பகுதிகளும் ஏற்கனவே பேருந்து வசதி பெற்றுள்ளன. இவ்வழித்தடத்தின் தட நீளம் 39.4 கி.மீ. ஆகும். மோட்டார் வாகன விதி களின்படி ஏற்கனவே பேருந்து வசதி பெறும் முனை களை இணைத்து 30 கி.மீ. க்கு அதிகமான தூரத்தில் நகரப்பேருந்து இயக்க அனுமதி இல்லை. கேட்கப் பட்ட வழித்தடத்தின் பெரும்பகுதி உள்கிராமப்புறங் கள் வழியாக செல்வதால் புறநகர் பேருந்து இயக்கத்திற்கு தேவையான பயணிகள் பிரயாணம் இராது என கருதப்படுகிறது. கேட்கப்பட்ட தடம் கீழ்கண்ட பேருந்துகளால் போதுமான அளவு பேருந்து வசதி பெற்று வருகிறது :

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

(அ) மேட்டூர் - சின்னசோரகை (வழி) நங்கவள்ளி தடம் எண். 30 .. 4 நடைகள்.

(ஆ) சேலம் நங்கனி - வேட்டாயபெருமாள்கோவில் (வழி) தாரமங்கலம், அமரகுந்தி, மல்லிக்குட்டை தடம் எண். எஸ். 2 — 8 நடைகள்.

(இ) ஓமலூர் - மேச்சேரி (வழி) பெரியேரிப்பட்டி, அமரகுந்தி, தொளசம்பட்டி தடம் எண். ஒ. 7 .. 8 நடைகள்.

(ஈ) மேட்டூர் - ஜலகண்டாபுரம் (வழி) நங்கவள்ளி மார்க்கம் .. ஒவ்வொரு 15 - 20 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம்.

கேட்கப்பட்ட தட நீட்டிப்பு பகுதி இன்னசோரகை முதல் நாகிரெட்டியூர் வரையுள்ள தூரம் ஒரு கி.மீ. மட்டுமே. அரசு விதிகளின்படி பேருந்து வசதி பெற்று வரும் ஊர்களிலிருந்து ஒரு கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள ஊர்கள் நேரடியாக பேருந்து வசதி பெற்றதாக கருதப்படவேண்டும். எனவே நாகிரெட்டியூர் நேரடியாக பேருந்து வசதி பெறுவதாகக் கருதப்படுகிறது.

கேட்கப்பட்ட தடம் எண்.எஸ். 2 நகரப்பேருந்து கிழக்கண்டவாறு பல்முனை வழித்தடப் பேருந்தாக இயக்கப்பட்டு வருகிறது.

(அ) சேலம் ஜங்சன் முதல் வேட்றாயப்பேருமாள் கோவில் வரை (வழி) தாரமங்கலம், அமரகுந்தி, மல்லிகுட்டை, ஓலைப்பட்டி — 8 நடைகள்.

(ஆ) சேலம் ஜங்சன் - ஓலைப்பட்டி (வழி) தாரமங்கலம், அமரகுந்தி, தொளசம்பட்டி .. 6 நடைகள்.

கேட்கப்பட்டவாறு அனைத்து நடைகளையும் மல்லிக்குட்டை வழியாக இயக்கினால், தொளசம்பட்டி கிராம மக்கள் பெற்று வரும் பேருந்து வசதிகளில் இழப்பு ஏற்படும் என்பதால் இக்கோரிக்கையை நிறைவேற்ற இயலாது.

கேட்கப்பட்டவாறு ஓ11 நகரப் பேருந்தை மல்லிக்குட்டை வழியாக தடம் மாற்றி இயக்கினால் இப் பேருந்தினால் தொளசம்பட்டி கிராம மக்கள் பெற்றும் வரும் பேருந்து வசதியில் குறைவு ஏற்படும். ஊர் மக்கள் ஆட்சேபிக்கக் கூடும் என்பதால் இக்கோரிக்கையை நிறைவேற்ற இயலாத நிலை நிலவுகிறது.

(மேலாண் இயக்குநர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், (சேலம்)-
12., ராம்கிருஷ்ணா சாலை, சேலம்-7.
கடித எண். 701/வ7/அபோக/97
நாள் : 11—08—1997.)

| வரிசை எண். (1) | மனு எண். (2) | மனுதாரரின் பெயரும், முகவரியும் (3) | மனுவின் கருக்கம். (4) |
|---|---|---|---|
| 15 | 5997 | திரு. சி. வீரமணி, காமராசர் நகர், சோனூர் போஸ்ட் மேட்டூர் அணை, சேலம் மாவட்டம். | சேலம் மாவட்டம், மேட்டூரிலுள்ள திருவள்ளுவர் மேனுபேக்சரிங் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலையின் கழிவு நீரால் சோனூர் மேற்கு கிராமத்தில் நிலத்தடி நீர் பாதிக்கப் பட்டுள்ளதாகவும், அப்பகுதி மக்களுக்கு குடிநீர் இணைப்பு அளித்துக் கொடுத்து, குடிநீர் விநியோகம் செய்ய தொழிற்சாலையின் நிர்வாகத்திற்கு உத்தரவு வேண்டுவது தொடர்பான மனு. |

துறையின் பதில்.

(5)

குழுவின் பரிந்துரை.

(6)

சேலம் மாவட்டம், மேட்டூரிலுள்ள திருவாளர்கள் திருவாங்கூர் கெமிக்கல்ஸ் மேனுபாக்சரிங் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலையானது 1967-ஆம் ஆண்டு துவக்கப் பட்டு இயங்கிவருகிறது. இந்நிறுவனம் மாதமொன்றுக்கு பேரியம் குளோரைடு - 180 டன்கள், பேரியம் கார்பனேட் 270 டன்கள், பேரியம் நைட்ரேட் - 45 டன்கள், ஸ்டான்டியம் நைட்ரேட் - 15 டன்கள், ஸ்டான்டியம் கார்பனேட் - 30 டன்கள், சோடியம் சல்பைடு -150 டன்கள் ஆகிய வேதியபொருட்களைத் தயாரித்து வருகிறது. இத்தொழிற்சாலையின் செயல்முறையில் உண்டாகும் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு, அதன் ஒரு பகுதி கொதி முறையில் திருப்பவும் உபயோகப்படுத்தப்படுகிறது மற்றும் மறுபகுதி தொழிற்சாலை நிலத்தில் உள்ள தோட்டத்தில் பாய்ச்சப்படுகிறது. மேலும் நடக் கழிவுகள் முறையாக சுத்திகரிக்கப்பட்டு, சான்கிரிட் தொட்டிகளில் சேகரிக்கப் படுகிறது.

1—8—1997 அன்று இத்தொழிற்சாலை ஆய்வில் பொழுது செயல்முறை கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு பின் தொழிற்சாலையின் நிலத்தில் உள்ள தோட்டங்களில் உபயோகப்படுத்துவது மற்றும் நடக் கழிவுகள் முறையாக சுத்திகரிக்கப்பட்டு சான்கிரிட் தொட்டிகளில் சேகரிக்கப்படுவதும் கண்டறியப்பட்டது. மேலும் இந்நிறுவனம் 1972-ஆம் ஆண்டு முதல் சமூக சேவையாக சோனூர் கிராம மக்களுக்கு அருகிலுள்ள திருவாளர்கள். கெம்பிளாஸ்ட் நிறுவனத்திடமிருந்து குடிநீரை விலைக்கு வாங்கி இரண்டு பைப்புகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்து வருகிறது. மேலும் அச்சமயம் மிக சில வீடுகளே சோனூர் கிராமத்தில் இருந்தன. தற்போது அப்பகுதியில் குடியிருப்புகள் அதிகமாகியுள்ளதாலும், தொழிற்சாலை நிர்வாகத்தினர் அவ்வப்போது ஊர் பொதுமக்களின் வேண்டுகோளுக்கும், மேட்டூர் கோட்டாச்சியர் மற்றும் சட்ட பேரவை உறுப்பினர் ஆகியோரின் வேண்டுகோளுக்கும் இணங்கி இன்று வரை 7 இடங்களில் குடிநீர் குழாய்கள் அமைத்து குடிநீர் விநியோகித்து வருகின்றனர்.

குடிநீர் அதிகமாக வினியோகிக்க வேண்டி, திரு. வீரமணி அவர்களின் மனு சட்டமன்ற பேரவைக்கு அனுப்பிய பின்னர், பொதுமக்கள், மேட்டூர் ஆர்.டி.ஓ. மற்றும் சட்ட பேரவை உறுப்பினர் ஆகியோர்கள் 20—7—1997 அன்று ஒரு குழு கூட்டம் நடத்தினர். அதில் மேலும் அதிகப்படியாக குடிநீர் குழாய்களை ஐந்து இடங்களிலிருந்து ஏழு இடங்களில் அமைப்பது பற்றியும், குடிதண்ணீர் இரண்டு மணி நேரம் நாளுக்கு குடிநீர் குழாய்கள் மூலமாகவும் மற்றும் மூன்று மணி நேரம் முறையாக மூன்று குடிநீர் குழாய்கள் மூலமாகவும் விநியோகம் செய்யப்பட வேண்டுமெனவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது. தற்போது 120 குடும்பங்களுக்கு நாளொன்றுக்கு 36000 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் தொடர்ந்து வழங்கப்படுமெனவும், இத்தொழிற் சாலை நிர்வாகத்தினர் கூறியுள்ளனர்.

(உறுப்பினர் செயலர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம்,
சென்னை.
சுடித எண். 599 7-11—97.
நாள் : 20—8—1997.)

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 16 | 5827 | திரு. ஏ. கணேசன், உழவர் மன்ற அமைப்பாளர், தலைவர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் தேக்கல்பட்டி கிராமம் சேலம் மாவட்டம். | சாலை மேம்பாடு- தார்சாலை தொழப்பாடி- தேக்கல்பட்டி - தேக்கல்பட்டி ஆயில்பட்டி, கருங்கல் பட்டி, மலையாளப்பட்டி மந்தைக்காடு, சாலையை மேம்பாடு செய்து நகர பேருந்து சேவை ஏனை செய்தல். |
| | | துறையின் பதில். | குழுவின் பரிந்துரை. |
| | | (5) | (7) |
| | | வேப்பிலைப்பட்டி முதல் தேக்கல்பட்டி வரை 2.80 கி.மீ. மேம்பாடு செய்து தார்ச்சாலையாக்க 1997-98ம் ஆண்டு வேலை உறுதியளிப்புத திட்டத்தின் கீழ் ரூ. 6.160 லட்சத்தில் வேலை எடுத்துக்கொள்ளப்பட்டு 1.00 கி.மீ. ஜல்லி பரத்தல் வேலை முடிவுற்றது. மேலும் 1.80 கி.மீ. ஜல்லி சேகரம் முடிவுற்றது. கி.மீ. 2/4-ல் ஒரு பாலம் கட்டும்வேலை தவிர மட்டம் வரை வேலை முடிவுற்றது. இப்பணிகள் யாவும் 31—1—1998-க்குள் முடிக்கப்பட்டுவிடும்.<br><br>கருங்கல்பட்டி முதல் மலையாளப்பட்டி வரை சாலையின் மொத்த தூரம் 2.20 கி. மீட்டரில் 1.00 கி.மீ. தூரம் 1997-98 ஆம் ஆண்டுக்கான பாதாளமன்ற உறுப்பினர் தொகுதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் உள்ள 1.8. கி.மீ. சாலையை வரும் நிதியாண்டில் எடுக்கப்பட உள்ளது. மலையாளப்பட்டி முதல் மந்தைக்காடு வரை உள்ள சாலை மொத்த தூரம் 2.00 கி.மீ: வரும் நிதியாண்டில் முன்னுரிமை கொடுத்து எடுக்கப்பட உள்ளது. | துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது. |
| | | (ஆணையாளர், வாழப்பாடி ஊராட்சி ஒன்றியம் கடிதம் எண் 3587/97/இ7, நாள்: 3—1—1998.) | |

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 17 | 5991 | திரு. எல்.வி. சின்னசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாடு மலையாளி மக்கள் இயக்கம் சேலம், | 1. சேலம் வட்டம் டி. பெருமாபாளையம் சார்ந்த காரைக்காட்டில் நியாயவிலைக்கடை அமைக்கக்கோருதல்<br><br>2. ஏற்காடு வட்டம் கொட்டச்சேட்டைச் சார்ந்த பெரியமுதூரில் நியாயவிலைக்கடை அமைக்கக் கோருதல். |

துறையின் பதில்.

(5)

1. சேலம் வட்டம் டி. பெருமாபாளையம் சார்ந்த காரைக்காடு கிராமத்தில் 48 குடும்ப அட்டைகள் மட்டும் உள்ளதாலும் காரைக்காடு கிராமத்திற்கும் டி. பெருமாபாளையம் நியாயவிலைக்கடைக்கும் இடையே 1 கி.மீ. தூரமே உள்ளதாலும் அரசு விதிகளின்படி பகுதி/முழு நேரக்கடை திறக்க இயலாது. பகுதி நேரக்கடை திறக்க குறைந்தது 200 குடும்ப அட்டை கொண்ட தாய்க்கடையிலிருந்து குறைந்தது 2. கி.மீ. இடைவெளி இருக்க வேண்டும் என்பதால் பகுதி நேரக்கடை திறக்க வாய்ப்பில்லை.

2. ஏற்காடு வட்டம் கொட்டச்சேட்டைச் சார்ந்த பெரியமதூரில் 86 குடும்ப அட்டைகள் மட்டும் உள்ளன. கொட்டச்சேடு நியாயவிலைக் கடைக்கும் பெரியமதூருக்கும் இடையே 2. கி.மீ-க்கு அதிக மாக இடைவெளி இருந்தாலும் ஒரு பகுதிநேரக் கடை திறக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்கவேண்டும் என்ற காரணத்தினால் பெரியமதூரில் புதியதாக பகுதிநேரக்கடை திறக்க வாய்ப்பில்லை.

(மாவட்ட விநியோக அலுவலர், சேலம் கடித எண். ந.க.580/98 ஜே 4, நாள் : 2—1—1998.)

(6)

துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

---

மனுதாரரின் பெயரும், முகவரியும்.

மனுவின் கருக்கம்.

வரிசை எண்.

மனு எண்.

(1) (2) (3) (4)

18 6006 திரு. வ். எஸ். சின்னபிள்ளை, தலைவர், அக்கிசெட்டி பாளையம், ஊராட்சி மன்றம், பழனியாபுரி அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.

மயானத்திற்கு பாதை வசதி அளிப்பது குறித்து.

துறையின் பதில்.

(5)

ஆத்தூர் வட்டம், அக்கிசெட்டிபாளையம் கிராம மயானத்திற்கு தற்போது புல எண். 10 கிராம நத்தம், பட்டா புல எண்கள். 29/8டி, 29/8இ, 29/8பி, 29/7, 25/10, 25/8, 25/6, மற்றும் 22/7 வழியாக பாதை வசதி உள்ளது. இந்த பாதை சில இடங்களில் குறுக லாக உள்ளது. கருவாய் கணக்குகளில் விலக்கிகள் உள்ளன. சுவம் எடுத்துச் செல்வதில் சிரமம் உள்ளதாக எனவே பிற்பட்டோர் நலத்துறை மூலம், மேற்படி

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

பாதை செல்லும் பட்டா நிலங்களை ஆர்ஜிதம் செய்து மனுதாரரின் கோரிக்கையின்படி அகலமான பாதை வசதி ஏற்படுத்தலாம்.

(மாவட்ட ஆட்சியர், சேலம் மாவட்டம் ந.க.50596/97 (ஜிஇ6), நாள் : 30—12—1997)

| வரிசை எண். (1) | மனு எண். (2) | மனுதாரரின் பெயரும், முகவரியும். (3) | மனுவின் சுருக்கம். (4) |
|---|---|---|---|
| 19 | 5602 | திரு. எ. காசி, ஊராட்சி மன்றத் தலைவர், இராமநாயக்கன்பாளையம், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். | இராமநாயக்கன்பாளையத்தைச் சார்ந்த காமராஜ் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்துவது குறித்து. |

துறையின் பதில். (5)

குழுவின் பரிந்துரை. (6)

தற்போதுள்ள அரசு விதிகளின்படி 30,000 ஜனத் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வேண்டும். ஆத்தூர் ஒன்றியத்தில் ஜனத் தொகை 105600 இதில்

1. மல்லியக்கரை
2. கீரிப்பட்டி
3. மஞ்சினி
4. தென்னங்குடிபாளையம்
5. கொத்தாம்பாடி

ஆகிய ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகிறது. மேலும் ஆத்தூர் ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட இயலாது. இருப்பினும் தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை மனுக்கள் குழுவிட மிருந்து பெறப்பட்ட மனுவின் பேரில் இராமநாயக்கன் பாளையம் காமராஜ் நகரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அரசிடமிருந்து அனுமதி கிடைத்த உடன் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

(துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள், சேலம். கடித எண் 14972/97/இ5-நாள் ; 30— 12— 1997)

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 20 | 5611 | திரு. அப்துல் மன்னான் வட்டார சுகாதார மேற்பார்வையாளர் (ஓய்வு) பங்களா தோட்டம், தவட்டிப்பட்டி (அஞ்சல்) சேலம். | காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கோணம்பட்டி அருகில் உள்ள சரபங்காநதியின் குறுக்கே தரைப்பாலம் அமைத்து பாதையைச் செப்பனிடக் கோருதல். |

துறையின் பதில்

(5)

மயில் கரடு அடிவாரத்தில் இருந்து நைனாகாடு வரை சுமார் அரை கிலோ மீட்டர் தூரம் புதிய சாலை அமைக்க கோரப்பட்டுள்ளது. பாதை அமைப்பதற்கு போது மான அளவில் தாவை ஏற்படாத தரிசு நிலம் அரசு புறம்போக்கு நிலமாக உள்ளது. இந்த நிலம் வருவாய் துறை கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது. இப் பாதையை புதியதாக அமைக்க தேவைப்படும் நிலத்தை உரிய முறை யில் பெற்று பாதை அமைக்க நடவடிக்கை மேற் கொள் ளப்படும்.

மயில் கரடு அடிவாரத்திலிருந்து கோணம்பட்டி வரை சுமார் 2 கி.மீ. தூரம் வரை தற்போது கப்பிச் சாலை யாக உள்ளது. மேலும் இச்சாலை ஊராட்சியின் பரா மரிப்பில் உள்ளது. இதை பராமரிக்க போதுமான நிதி ஆதாரம் மேற்படி ஊராட்சியில் இல்லை. எனவே வரும் நிதியாண்டில் தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நிதி ஆதாரம் பெற்று தார்ச் சாலை அமைத்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோணம்பட்டி கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள சர பங்கா ஆற்றில் குறுக்கே தரைபாலம் அமைக்க பாராளு மன்ற தொகுதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ. 4.00 லட்சம் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு தற்போது வேலைகள் துவங்கப்படும் நிலையில் உள்ளது.

(ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், காடையாம்பாட்டி ந.க. எண் 4253/97, அ6, நாள் 31—12—97.)

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 21 | 5616 | திரு.எம். ஏ. ராஜமாணிக்கம் தேவூர் நகர பஞ்சாயத்து கவுன்சிலர் தேவூர் அஞ்சல் சங்ககிரி (தாலுக்கா), சேலம் மாவட்டம் | சங்ககிரி வட்டம் தேவூர் கிராமம் வாரச் சந்தையிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றியும் சுற்றிலும் முள் வேலி போடு வது சம்பந்தமாக. |

துறையின் பதில்.

(5)

தேவூர் கிராமத்தில் உள்ள சந்தை ஆக்கிரமிப்பு அப்புறப் படுத்தப்பட்டது. தேவூர் பேரூராட்சிக்கு அரசு மான்யம் கிடைக்கப்பெற்றவுடன் அங்கு முள் வேலி போடுவதாக பேரூராட்சி தலைவர் தெரிவித்துள்ளார்.

(கோட்டாட்சியர், சங்ககிரி.
ந.க. 5616-97 (பி), நாள்: 31—12—97.)

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 23 | 5619-5620 | திருமதி கே. அலமேலு, தலைவர், ஊராட்சி மன்றம், புளியம்பட்டி மேட்டுப்பட்டி அஞ்சல், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம். | புளியம்பட்டி புதிய ஆதிதிராவிடர் காலனியில் குடிதண்ணீர் பற்றாக்குறை போக்குவது குறித்து. |

| (5) | (6) |
|---|---|
| புளியம்பட்டி ஊராட்சி ஆதிதிராவிடர் புதிய காலனியில் சுமார் 12 வீடுகள் உள்ளன. அவற்றிற்காக ஒரு குழாய் போடப்பட்டு தண்ணீர் சுமார் 2 மணி நேரம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் கூடுதலாக 2 குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.<br>(ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம் ஓமலூர். த.க.எண். 6728/97 இ1, நாள் 31-12-97.) | துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது. |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 25 | 5625 | செல்வி எஸ். அருள்மொழி, 8/38, காட்டூர், சிவதாபுரம், சேலம். | சிவதாபுரம் காட்டூர் பகுதியில் உள்ள ஆழ் துளைக்கிணறு மேலும் ஆழப்படுத்தியும், புதிய மின் மோட்டார் பொருத்தவும் கோருதல். |

குழுவின் பரிந்துரை.

| (5) | (6) |
|---|---|
| ஏற்கனவே உள்ள ஆழ் துளைக் கிணறு ஆழப்படுத்த இயலாது. பழைய மின் மோட்டார் பழுதுபார்க்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. புதிய மோட்டார் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் சிவதாபுரம் பகுதிகளுக்கு காவேரி குடிநீர் வழங்கக் குடிநீர் வடிகால் வாரியத்தால் குழாய் பதிக்கும் வேலை நடைபெற்று வருகிறது. மார்ச், 1998க்குள் பணி முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>(ஆணையாளர், சேலம் மாநகராட்சி க.எண். 3843/97[அ2, நாள்: 28-10-97.) | துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது. |

| வரிசை எண். | மனு எண் | மனுதாரரின் பெயரும், முகவரியும் | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 24 | 5540 | திரு. என். வி. சுப்பையன், அலுவத் தலைவர், ஒன்றிய இ.மு. கழகம், ஆத்தூர் (சேலம்) | சேலம் மேட்டூர் அணை அதிக வரத்து உள்ளதை (உபரி நீர்) கால்வாய் (2) குழாய் மூலம் சேலம் வழியாக பேரூரில் உள்ள வசிஷ்டா நதியில் கொண்டு வந்து விடுதல் குறித்து. |

| | | | |
|---|---|---|---|
| | | துறையின் பதில் (5) | குழுவின் பரிந்துரை. (6) |
| | | அற்பொழுது காவிரி நீர் பிரச்சினை நடுவர் தீர்ப்பாயத்தில் உள்ளபடியால் இத்திட்டத்தை இப்பொழுது செயல்படுத்த இயலாது. மேலும் அரசு துணைச் செயலர், பொதுப் பணித்துறை சென்னை அவர்கள் தலைமைப்பொறியாளர் அவர்களுக்கு எழுதிய கடிதம் எண். 112731/2/91, நாள் 24—1—1992 எல்லித திட்டமும் காவிரி நீர் பிரச்சினை வழக்கு முடிவுக்குப்பின் தான் ஆய்வு செய்யவோ அல்லது செயல்படுத்தவோ வேண்டும் என்று கூறியுள்ளார். எனவே இத்திட்டம் தற்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள இயலாது (செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை திட்டங்கள் திட்டம் மற்றும் வடிவமைப்புக் கோட்டம், சேலம்-7 கடிதம் எண். 50596 நாள் 5—1—1998) | துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது. |
| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும் | மனுவின் சுருக்கம். |
| (1) | (2) | (3) | (4) |
| 25 | 5372 | திரு. பெ. எணையன், அரிசனத் தெரு, நாலக்குறிச்சி, ஆத்தூர் வட்டம். | நாலக்குறிச்சி கிராம சர்வே எண். 103/2ல் 1.25ல் கள்ளச்சாராயம் காய்ச்சுவது குறித்து. |
| | | துறையின் பதில் (5) | குழுவின் பரிந்துரை. (6) |
| | | நாலக்குறிச்சி கிராம சர்வே நெம்பர் 103/2 பொது தடவுரிச்சம்பந்தமாக மனுதாரருக்கும் அருகாமை நிலச்சொந்தக்காரர்கள் திருவாளர்கள். 1. காந்தி, 2. லட்சுமணன், 3. லட்சுமி, 4 கலியம்மாள் ஆகியவர்களுக்குள் ஏற்பட்ட தகராறு மற்றும் எதிர்மனுதாரர்கள் கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக கூறப்பட்ட புகாரின் பேரில் தலைவாசல் காவல் நிலையக் குற்ற வழக்கியல் எண். 438, 486, 557, 619, 634, 724 728, 844, 912, 974/97 பிரிவுகளில் வழக்கு தொடரப்பட்டு தண்டனை பெற்றுள்ளனர். (காவல் கண்காணிப்பாளர், சேலம், கடிதம். எண். 60669/ஜி3/97) | துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது. |
| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | மனுவின் சுருக்கம். |
| (1) | (2) | (3) | (4) |
| 26 | 5349 | திரு. கி. பரமேஸ்வரன், இயக்குநர், சங்ககிரி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், சந்தைப்பேட்டை சங்ககிரி. | சங்ககிரி பேரூராட்சி பகுதியில் சங்ககிரி வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் சந்தைப்பேட்டை பகுதி ச. எண். 542/16ல் தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியப் பகுதி மூலம் சர்னல் வசதி செய்து கொடுக்கக் கோட்டல். |

துறையின் பதில்.

(5)

மனுதாரர் திரு. சி. பரமேஸ்வரன் குறிப்பிட்டுள்ளபடி ச.எண். 542/16 மலை அடிவாரம் காட்டு பகுதியாகும். இப்பகுதிக்கு சாலை அமைக்க இப்பேரூராட்சியின் நிதி பற்றாக்குறையினால் 30—6—1997ல் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் சாலை அமைத்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. குடிசை மாற்று வாரியம் இந்த நிதியாண்டில் போதிய நிதி வசதி இல்லை யென்று தெரிவித்துள்ளது இருப்பினும், இவர் குடியிருக்கும் தெருவில் 100 அடி நீளத்திற்கு சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதை யடுத்துள்ள தூரத்திற்கும் சிமெண்ட் சாலை அமைக்க நடப்பு ஆண்டில் ரூ. 70,000-க்கு மதிப்பீடு தயாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 31—1—1998க்குள் சாலை அமைத்து முடிக்கப்படும்

[உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) சேலம் மண்டலம் கோப்பு எண். 5/1998[

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதில் படிதீதுப்பதிவு செய்யப்பட்டது.

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும் | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 27 | 5788 | திரு. ந. பெரியசாமி, ஆயர்பாடி காட்டுக்கோட்டை, தலைவாசல் ஆத்தூர் சேலம் மாவட்டம். | கிராமங்களில் உள்ள பெண் ஆசிரியை குடியிருப்பு கட்டிடங்கள் பழுது பார்ப்பது குறித்து. |

துறையின் பதில்

(5)

இவ்வூராட்சி ஒன்றியத்தில் வனத்தூர், வேப்பநத்தம், ஆர்த்தி அக்ரகாரம், சிறுவாச்சூர் கிராமங்களில் தலா ஒன்றும், கிழக்கு ராஜபாளையம், 2 கிராமத்தில் 2ம் ஆக மொத்தம் 6 குடியிருப்புகள் உள்ளன அனைத்து குடியிருப்புகளும் பழுதடைந்துள்ளது. இவற்றை பழுதுகள் சரி செய்ய (தரை, கூரை, ஜன்னல், கதவுகள், கழிவறை, சுற்று சுவர் உட்பட சுமார் ரூ. 2.00 நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. ஒன்றிய கல்விநிதியில் நிதிநிலை பற்றாக் குறையாக உள்ளது. மாநில நிதி குழு மான்யத்தில் பழுதுகள் மேற்கொள்ள ரூ. 2.00 நிதி ஒதுக்கீடு அனுமதி கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் சேலம் அவர்களுக்கு இவ்வலுவலக ந.க. எண். 6484/

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

97/அ2/நாள் 31—12—1997ல் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு அனுமதி கிடைக்க பெற்றதும் பணிகள் துவங்க செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆணையாளர், தலைவாசல் பேரூராட்சி கடிதம் எண். ந.க. எண். 6484/97/அ2/ நாள் 31—12—1997.)

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும் முகவரியும். | மனுவின் கருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 28 | 5810 | திரு. எம். சீனிவாசன், மற்றும் ஜி. பெரியண்ணன், பெத்தூர் அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம். | ஆத்தூர் பெத்தூர் சாலை கோரையாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல் மற்றும் சாலை சீரமைப்பு செய்தல். ஆத்தூர் நகராட்சிக்குட்பட்ட பெத்தூர் சாலை கோரையாற்றில் தரைப்பாலம் அமைத்தல். |

| (5) | (6) |
|---|---|
| ஆத்தூர் பெத்தூர் சாலை கி.மீ. 0/0-3/0 ஆத்தூர் நகராட்சியின் பொறுப்பில் உள்ளது. இச்சாலையில் கி.மீ. 2/0ல் கோரையாற்றின் குறுகலே 30 மீ. நீர்ழிப்பாதை உள்ள இடத்தில் மூழ்கு பாலம் அமைக்க தோராயமாக ரூ. 35.00 லட்சம் நிதி தேவைப்படும். உள்ளாட்சி மன்றக்கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளில் பாலம் கட்டுவதற்கு இத்துறையால் இயலாது. எனவே பாலம் கட்டுவது குறித்து ஆத்தூர் நகராட்சிமூலம் நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேலும் பெத்தூர் -கடம்பூர் சாலை மற்றும் பெத்தூர் பஞ்சாயத்து எல்லை முதல் கடம்பூர் வரையிலான சாலைப்பகுதிகள் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் மற்றும் நபார்டு, முதல் கட்டம் மூலமாக இத்துறை மூலம் எடுத்துச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதேபோல ஆத்தூர்-பெத்தூர் சாலை கி.மீ. 3/0-8/4 வரையிலான சாலைப்பகுதியும் நபார்டு இரண்டாம் கட்டப்பணியில் எடுத்துச் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மீதம் உள்ள காலைப்பகுதி கி.மீ. 0/0-3/0 ஆத்தூர் நகராட்சியை சார்ந்ததாகும். இச்சாலை மேம்பாடு மற்றும பாலம் கட்டுதல் போன்றவை ஆத்தூர் நகராட்சி மூலம் செயல்படுத்தலாம் | துறையின் பதில் பயன்படுத்தப்பதிலுசெய்யப்பட்டது. |

(தோட்டம் பொறியாளர், நெ.இ.ப. சேலம்/7 கடிதம் எண். 12590/97/இவ.அ. 1/ நாள் 2—1—1998).

பைத்தூர் சாலையில் குறுக்கிடும் கோரையாற்றின் மேல் பேரும்துகள் செல்லக்கூடிய அளவிற்கு பாலம் அமைப்பதற்கு சுமார் ரூ. 10.00 லட்சம் செலவாகும். இந்நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாத தால், அரசிடமிருந்து நிதி உதவி கிடைத்தால் இப் பணியை செய்து முடிக்க இயலும்.

(ஆணையாளர்,
ஆத்தூர் நகராட்சி.)

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 29 | 5818 | திரு. அப்பு த/பெ. கொடியமுத்து, மும்முடி கிராமம் ஆத்தூர் வட்டம். | கோவில் ஆக்கிரமிப்பு நிலங்களை நீக்கி கோவில் பெயருக்கு வழங்க கேட்டல். |

துறையின் பதில்.

(5)

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் மும்முடி கிராமம் புல எண். 98/1 விஸ் 3.17.0 ஹெக்டர் நிலம் கிராம கணக்கில் ''களர்'' என பாகுபாடு செய்யப் பட்டுள்ளது. இந்த நிலம் அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலமாகும். இந்த நிலத்தில் கீழ்க்கண்டவாறு ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகிறார்கள்.

| பு.எண். | மொத்த விஸ்தரிப்பு | அனுபவ விஸ்தரிப்பு | ஆக்கிரமிப்புதாரர் பெயர். | ஆக்கிரமிப்பு விபரம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 98/1 | 3.17.0 | 1.21.5 | செங்கோட்டுவேல் | நேரில் சுட்சி சாகுபடி செய்து அனுபவம் |
| | | 0.20.5 | மாணிக்கவண்டர் | தற்போது கோவில் அனுபவத்தில் சோளம் சாகுபடி செய்து அனுபவம் |
| | | 0.20.5 | ஆவப்ப அய்யனார் கோவில் | வழிபாடு செய்து அனுபவம். |
| | | 0.30.0 | விநாயகர் கோவில் பூசாரி வீடு | நிழல் தரும் மரங்கள் நட்டு அனுபவம். |

மேற்படி ஆக்கிரமிப்புகள் சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகிறார்கள். தற்போது மாணிக்கம் என்பவர் தனது ஆக்கிரமிப்பு பாகத்தை (சுமார் 0.50 சென்ட்) கோவிலுக்கு விட்டுக் கொடுத்து விட்டார். கோவிலுக்கு தீற்போது 1.00 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலம் போதுமானது என மனுதாரர் திரு. அப்பு என்பவர் வாக்கு மூலம் கொடுத்துள்ளார். திரு. செங்கோட்டுவேல்

துறையின் பரிந்துரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

எற்பவர் ''இந்து'' கவுண்டர் வகுப்பைச் சேர்ந்தவர். கவுண்டர் சமுதாயத்தினரால் கட்டப்பட்டு வழிபாடு செய்து வரும் வினாயகர் கோவில் பூசாரி குடியிருப்பு வீடு மற்றும் நிழல் தரும் மரங்கள் முதலிய ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டால் வகுப்புவாத கிளர்ச்சிகளுக்கு வழிகோலும் என தெரிகிறது. எனவே இம்முயற்சியினை கைவிடலாம்.

தற்போது கோவில் அனுபவத்தில் உள்ள 1.00 ஏக்கர் நிலத்தை கோவில் பெயருக்கு மாறுதல் செய்ய சம்பந்தப்பட்ட இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினர் உரிய படிவத்தில் மனு செய்த பின்னர் மேல் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(வட்டாட்சியர் கடிதஎண். ந.க. 4543/97 (ஏ2) நாள் : 3—1—1998.)

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 30 | 5824 | திரு. எஸ். நடராஜன், ஊராட்சி மன்ற உறுப்பினர் இராஜபாளையம் ஊராட்சி, ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம். | வீரபாண்டி ஒன்றியம் இராஜபாளையம் ஊராட்சி நைனாம்பட்டி கிழக்குப்பகுதிக்கு ஆழ்துளைக்கிணறும் மேல்நிலைத் தொட்டியும் அமைத்துக் கொடுக்கக் கோருதல். |

துறையின் பதில்.

(5)

இக்குடியிருப்பு தற்போதைய குடிநீர் வசதி நிலவரப்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 8 லிட்டர்கள் வீதம் வழங்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பணிகளை 1998-99ம் நிதியாண்டில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

குழுவின் பரிந்துரை.

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

(நிர்வாகப் பொறியாளர், த.கு.வ. வாரியம் கி.கு.தி. கோட்டம், சேலம். கடிதஎண். கோ. 500/இவ.அ1/97/ நாள் : 2—1—1998.)

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | மனுவின் சுருக்கம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 31 | 5826 | திரு. வி. கணேசன் (உழவர் மன்ற அமைப்பாளர்), தலைவர், எஸ்.எம்.டி. 642, பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், தேக்கப்பட்டி கிராமம், நா. காட்டூர் அஞ்சல், (வழி) மங்களபுரம், சேலம் மாவட்டம். | சேலம் மாவட்டம், வாழப்பாடி ஒன்றியம், தேங்கல் பட்டி ஊராட்சியில் மலையாளப்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையக் கட்டிடம் கட்ட வேண்டுதல் சம்பந்தமாக. |

துறையின் பதில்.

(5)

குழுவின் பரிந்துரை.

(6)

சேலம் சுகாதார மாவட்டம், திருப்பூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த துணை சுகாதார நிலையம், இயங்கி வரும் மலையாளப்பட்டியில், ஒரு புதிய துணை சுகாதார நிலைய கட்டிடம் கட்டுவதற்கு காலி நிலம் தானமாக பெறப்பட்டுள்ளது. இந்த நிதி ஆண்டில் கட்டிடம் கட்டுவதற்கு அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது கட்டிடம் கட்டுவதற்காக பொதுப்பணித் துறையிடம் நிலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. விரைவில் மலையாளப்பட்டியில் கட்டிடம் பொதுப் பணித் துறையினரால் கட்டப்படும்.

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

(துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், சேலம் கடிதஎண். 8812/இ5/97, நாள் : 24—07—1997)

| வினாஎண். | மனுஎண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 32 | 5829 | திரு. எஸ். ஜெயக்குமார், முன்னாள் செயலாளர், அன்னை இந்திரா காந்தி நகர் அழகாபுரம் மிட்டாபுதூர் சேலம். | வீடு கட்டிதர வேண்டிய மனு. |

துறையின் பதில்.

(5)

குழுவின் பரிந்துரை.

(6)

1974 முதல் 1987 வரை ஊரகப் பகுதிகளில் தாட்கோ மூலம் வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கான திட்டம் அமுலில் இருந்தது, பின்னர் இந்திரா குடியிருப்பு திட்டம், தொகுப்பு வீடுகள், கட்டும் திட்டம், மூலம் ஊரக வளர்ச்சி துறையால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் மனுதாரர் மாநகராட்சி பகுதியில் வீடு கட்டிதர கோரியுள்ளார். மாநகராட்சி பகுதியில் மேற்படி திட்டம் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

(மாவட்ட மேலாளர், தாட்கோ, சேலம். கடித எண். அ/2/4162/97, நாள் : 2—1—1998.)

| வினா எண். (1) | மனு எண். (2) | மனுதாரரின் பெயரும், முகவரியும். (3) | மனுவின் கருக்கம். (4) |
|---|---|---|---|
| 33 | 5244 | திரு. எஸ்.கே. செல்வராஜ், எம். ஏ., தமிழ் மாநில காங்கிரஸ், தலைவாசல் வட்டாரம், ஆத்தூர் வட்டம். | 1. தலைவாசலில் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை ஒன்றை ஏற்படுத்தி நிறைய நகரப் பேருந்துகளை இயக்க வேண்டும்.<br>2. தலைவாசலிலிருந்து சென்னைக்கு புதியதாக இரண்டு பேருந்துகளை இயக்க வேண்டும். |

துறையின் பதில்.

(5)

(1) தற்போது தலைவாசலை மையமாகவைத்து அரசுப் போக்குவரத்து கழகத்தினால் நான்கு நகரப் பேருந்துகள், தலைவாசலை சுற்றியமைந்த பல்வேறு கிராமங்களுக்கும் இயக்கப்பட்டு வருகின்றன. இது மட்டுமல்லாமல் ஆத்தூரிலிருந்து துவங்கி தலைவாசல் வழியாக இதனை சுற்றியமைந்த பல்வேறு கிராமங்களுக்கும் நகரப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கூறிய நகரப் பேருந்துகள் (மொத்தம் 12 மூலம் தலைவாசலும், இதனை சுற்றி அமைந்த கடப்பகுதிகளும் போதிய பேருந்து வசதி பெற்றுவருகின்றன. மேலும் ஒரு ஊரில் பணிமனை துவக்கவேண்டுமானால் அங்கிருந்து 30 முதல் 40 வரை பேருந்துகளை துவக்கி இயக்க வாய்ப்புள்ளதாக இருந்தால்தான் பணிமனை செயல்படமுடியும். இந்த அளவுக்கு பேருந்துகள் துவக்க தேவையும் பயணிகள் போக்குவரத்தும் இல்லை.

(2) தலைவாசல் அமைந்துள்ள தாலுக்கா தலைமையிடமான ஆத்தூரில் இருந்து இரண்டு பேருந்துகள் தலைவாசல், கள்ளக்குறிச்சி வழியாக சென்னைக்கு இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளை இவ்வூர் மக்கள் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்புள்ளது. இது தவிரவும் சேலத்திலிருந்து ஆத்தூர், தலைவாசல், கள்ளக்குறிச்சி வழியாக சென்னைக்கு இயக்கப்படும் அதிக அளவு எண்ணிக்கையுள்ள பேருந்துகள் மூலமும் நேரடியாகவும் அல்லது கள்ளக்குறிச்சியை அடைந்து அங்கிருந்து சென்னைக்கு செல்லவும் போதிய பேருந்து வசதி தற்போது இருந்து வழிகிறது.

மேலும் ஒன்றியங்களிலிருந்து தமிழகத்தின் தலை நகரான சென்னைக்கு பேருந்துகள் இயக்குவதற்கு போதுமான பயணிகள் வரத்தும் இராது, காரியசாத்தியமாகவும் இராது.

(மேலாண் இயக்குநர், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், சேலம்-7, கடிதம் எண் 549/வ7/அபோக/97, நாள் : 2—7—1997)

(6)

துறையின் பதில் படித்துப் பதிவு செய்யப்பட்டது.

| வரிசை எண். | மனு எண். | மனுதாரரின் பெயரும், முகவரியும். | மனுவின் சுருக்கம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 34 | 5233 | திரு. பி. குப்புசாமி, 5/1ஏ, மேற்கு மேம்பால நகர், திருவாகவுண்டனூர், சேலம்-5. | வார்டு 24, மேற்கு மேம்பால நகருக்கு குடி வசதி கோருதல். |

துறையின் பதில்.

குழுவின் பரிந்துரை.

(5)

(6)

திருவாக்கவுண்டனூர் மேற்கு மேம்பால நகரில் வசித்து வருபவர்களுக்குக் குடிநீர் லாரி மூலம் தற்போது வினியோகிக்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி பகுதிக்குக் குடிநீர் வழங்க ரூ. 6.25 கோடி அனுமதி வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் குழாய்கள் பதித்து அதன் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

துறையின் பதில் படித்துப்பதிவு செய்யப்பட்டது.

(ஆணையாளர், சேலம் மாநகராட்சி,

க.எண். 20692, நாள்: 25-6-1997.)

டி. சாலமன் ஜெயபால்,
செயலாளர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மக்கள் குழு (1997-98)

பதினோராவது பேரவை

ஒன்பதாவது அறிக்கை

பிழை திருத்தப் பட்டியல்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 5 | 23 | பேருற்து | பேருந்தி |
| 14 | 15 | பொறுத்தப்பட்ட | பொருத்தப்பட |
| 18 | 7 | தோரயமாக | தோராயமாக |
| 18 | 18 | ஆகிக்ரமிப்புகளை | ஆக்கிரமிப்புகளை |
| 19 | 20 | பேருந்துவை | பேருந்தினை |
| 21 | 3 | செய்ப்பட்டது. | செய்யப்பட்டது. |
| 21 | 32 | வழ்ங்கப்பட்டு | வழங்கப்பட்டு |
| 21 | 33 | உறுப்பினர் | உறுப்பினர். |
| 26 | 6 | பளியம்பட்டி | புளியம்பட்டி |

டி. சாலமன் ஜேயபால்,
செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS